இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 08 | திகதி : 05.05.2019 | விலை : 30.00

## உயிர்ப்பு ஞாயிறில் தேவாலயங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து தொடர் குண்டுத் தாக்குதல்கள்

# 261 பொது மக்கள் உயிரிழப்பு

### 500 பேர் படுகாயம்; இலங்கைத் திரு அவை பெரும் சோகத்தில்



தலைநகர் கொழும்பு உட்பட உயிர்த்த ஞாயிறு அன்று இடம் பெற்ற 8 தொடர் குண்டு வெடிப்புக்களில் 261 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பலியானவர்கள்களில் சுமார் 42 வெளிநாட்டவர்களும் உள்ளடங்கும் நிலையில், காயமடைந்த பலரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பின் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்டியன் தேவாலயம், மட்டக்களப்பு புனித சீயோன் தேவாலயம் ஆகியவற்றிலும், ஷெங்ரில்லா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பரி ஆகிய நட்சத்திர ஹோட்டல்களிலும் உயிர்த்த ஞாயிறு அன்று (21.04.2019) தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. தேவாலயங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடாத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளமை பெரும் கவலையளிக்கும் விடயமாகவுள்ளது.

## திருத்தந்தை ஆழ்ந்த கவலை



இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் இடம் பெற்ற தாக்குதல்கள் குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

பிரார்த்தனைக்காக்க கூடியிருந்த வேளை காயமடைந்தவர்கள் மற்றும் கொடூரமான வன்முறைகளால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தினருடன் இதயபூர்வமாக நெருக்கமாக இருப்பதை வெளிப்படுத்த விரும்புவதாக சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி தன்னால் ஆற்றப்பட்ட உர்பி எட் ஒர்பி(நகருக்கும், உலகிற்கும்) உரையில் திருத்தந்தை தெரிவித்தார். இலங்கை எங்குமுள்ள தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும் இடம்பெற்ற பல தாக்குதல்களால் கடும் துயரமும், வேதனையும் அடைவதாக திருத்தந்தை கூறினார். இந்தத் தாக்குதல் சம்பவங்களில் துன்பகரமாக மரணத்தைத் தழுவிய அனைவரையும் தான் இறைவன்பால் ஒப்படைப்பதாகத் தெரிவித்த திருத்தந்தை, இந்த நிகழ்வுகளால் காயமடைந்தவர்களுக்கும் அதனால் துயரங்களை அனுபவித்து வருபவர்களுக்குமாகப் பிரார்த்திப்பதாகக் கூறினார்.

## இது போன்ற துன்ப அனுபவம் எமக்கு வேண்டவே வேண்டாம்

### யாழ் ஆயர் உருக்கம்



உயிர்ப்புப் பெருவிழா தினத்தில் இலங்கை நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களால் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். இறந்த அனைவரும் அவர்கள் எந்தமதத்தைச் சேர்ந்திருப்பினும் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இளைப்பாற இறையருள் வேண்டுகிறோம் என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண, மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

தனது இரங்கல் குறிப்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:

இந்த நிகழ்வுகளால் காயப்பட்டும் இழப்பால் வேதனைப்பட்டும் துடிக்கும் அனைவரின் துன்பத்தில் நாமும் முழுமையாகப் பங்கெடுத்து அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். துன்பத்தில் துடிக்கும் குடும்பத்தினருடன் நாமும் செபத்தில் இணைந்திருக்கிறோம். இறைவனே இவர்களோடு இருந்து இத்துன்ப அனுபவங்களைத் தாங்கத் துணைபுரிவாராக. இவர்களின் துன்பத்தை இறைவனே அமைதிப்படுத்த வேண்டும்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## மறையாசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சி - 2019



அழைத்தல் ஆண்டில் மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப்பயிற்சி ஆனது ஜனவரி மாதம் 20ம் திகதி முதல் ஏப்ரல் 16ம் மாதம் திகதி வரை நடைபெற்றது. யாழ். மறைமாவட்டத்தின் பங்குகளின் தேவையை முன்னிட்டு மறையாசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் நாவாந்துறை, மண்டைதீவு, நாரந்தனை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, இளவாலை, உரும்பிராய், சாவகச்சேரி, பருத்தித்துறை, வட்டக்கச்சி, குமுழமுனை, வலைப்பாடு, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆகிய 14 பங்குகளிலிருந்து 21 பேர் மறையாசிரியர் பயிற்சி நெறியைப் பெற்றுத் தேர்ச்சியடைந்தார்கள். சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 13.04.2019 அன்று யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் A.F பெனற் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வருகை தந்திருந்தார். சிறப்பு விருந்தினர்களாக எமது மறைமாவட்டத்தின் மூத்த குரு அருட்பணி S.J. இம்மானுவேல் அடிகளாரும், பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் A.J. யாவிஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். தேர்ச்சிபெற்ற மறையாசிரியர்களுக்கு ஆயர் அவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார். மேலும் மறைக்கோட்ட முதல்வர்கள், மறைக்கோட்ட மறைக்கல்விப் பணி இணைப்பாளர்கள், பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அன்று பயிற்றப்பட்ட மறையாசிரியர்களின் அனுபவப்பகிர்வு, ஒருங்கிணைந்த நடன நிகழ்வு, மறையாசிரியர் எழுச்சிக் கீதம் என்பவற்றுடன் நாளின் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## கனேடியப் பிரதமர் கவலை தெரிவிப்பு

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ருடேயு அவர்கள் இலங்கையில் உயிர்ப்பு விழா அன்று நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல் குறித்துத் தனது ஆழ்ந்த கண்டனத்தையும், கவலையையும் தெரிவிப்பதாகத் தொலைபேசியில் கனேடிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

கனேடியப் பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீக இயக்குனர்கள் உயிர்ப்பு நாளில் உயிர்களை இழந்தோர்களுக்காகவும், உடல் காயமுற்றோர்களுக்காகவும் சிறப்பு ஆராதனைகளையும் நடாத்தி வருகின்றனர்.

## உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் உயிரிழந்தவர்களுக்காக யாழ். மறைமாவட்டம் துக்கம் தெரிவிப்பு



உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் உயிரிழந்தவர்களுக்காகத் துக்கம் தெரிவித்து யாழ் மறைமாவட்டத்தில் ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் ஒன்றிணைந்து இறந்தவர்களின் ஆன்மா ஈடேற்றம் பெறவும், காயமுற்றோர் விரைவில் சுகம் பெறவும், இழப்புக்களில் பாதிப்புற்றோர் நலம் பெறவும் வேண்டி ஆயர் இல்லத்திலும், பேராலயத்திலும், பங்குகளிலும் விசேட ஆராதனைகளையும் செப வழிபாடுகளையும் நடாத்தினர்.

ஆயர் இல்லத்தில் குருக்கள் யாழ். ஆயருடன் இணைந்து சிறப்பு வழிபாடு நடாத்துவதையும், யாழ். பேராலயத்தில் குரு முதல்வர் தலைமையில் யாழ். மாநகர சபை முதல்வர், ஆளுநரின் செயலர், பொலிஸ் அதிகாரிகள், குருக்கள் துறவியர் இணைந்து மெழுகுவர்த்திப் பவனியில் இணைந்து அஞ்சலியையும் செலுத்தினர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## பூகோள அரசியலின் பிரித்தாளும் நகர்வுகள்- தமிழ் முஸ்லிம் மக்களே அவதானம்!

மனிதாபிமானம் என்பது மனிதனின் பிரதானமான அடிப்படைப் பண்பு அந்த மனிதப் பண்பு என்பது மதங்களின் போதையின் ஊடே வருவது. ஆனால் அந்த மதம் வெறியாகவும் ஏனைய மதத்தவர்களை சாத்தான்களாகப் பார்ப்பதும் நோக்குவதும் பயங்கரவாதமே. அவ்வாறான பயங்கரவாதச் சிந்தனை என்பது குறித்த மதம் ஒன்றின் சுதந்திரத்திற்கான அல்லது ஆதிக்கத்துக்கான தூய போராட்டமாகவும் கருத முடியாது. உலகத்துக்கு ஒரு மதம்தான் என்றும் ஒரே கடவுள்தான் என மார்தட்டுவதும் சித்தாந்தம் அல்ல. தமக்கு விரும்பிய மத போதனைகளைப் பின்பற்றுவதும் அதனைப் பற்றி மற்றயவர்களுக்குப் போதிப்பதும் தனி மனிதனுக்குள்ள அடிப்படை உரிமை. ஆனால் உலகத்துக்கு ஒரு மாதம்தான் என்ற கருத்தை முன்வைத்து ஏனைய மதத் தவர்களை நிந்திப்பதும். தாக்குதல் நடத்துவதும், அச்சுறுத்துவதும், வற்புறுத்துவதும் மதபோதனையாகாது.

இயல்பான புரிதலின் அடிப்படையில் எழுவதுதான் ஒருவருடைய மத சிந்தனை. அதனையே உலகம் ஏற்கிறது. நம்புகிறது. ஆனால் மத மாற்றத்துக்கான வன்முறைகளையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் எவராலும் அனுமதிக்க முடியாது. ஈழப்போராட்டம் தமிழ் மக்களின் விடுதலைக்கானது என்று தற்போது பலரும் பேசுகின்றனர். உரிமைக்காகவே புலிகள் போராடினார்கள். அதனாலேயே தமிழ் மக்கள் புலிகளை ஆதரித்தனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளார். மதவெறியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் போராட்டங்களை ஏற்க முடியாதெனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் லண்டன் மெயில் என்ற நாளிதழ் ஒன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில், இலங்கையில் ஐ.எஸ் இஸ்லாமியவாதிகள் நடத்திய பயங்கரத் தாக்குதல்களைக் கண்டித்துள்ளது. அத்துடன் புலிகள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் மீளவும் அவர்கள் எழ முடியாதெனவும் புலிகள் மதவாதிகள் அல்ல என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தவில்லையெனவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆகவேதான் விடுதலைப் போராட்டத்திற்கும் பயங்கரவாதப் போராட்டத்திற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு என்பதை விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக உதவி செய்த நாடுகளும் சிங்கள அரசியல் தலைவர்களும் தற்போது கூற ஆரம்பித்துள்ளனர். எனவே இஸ்லாமியவாத மூளைச் சலவைக்கு எடுபட்டு பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடும் சில முஸ்லிம் இளைஞர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

முப்பது ஆண்டுகால அஹிம்சைப் போராட்டத்தையும் மேலும் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தையும் சந்தித்த தமிழ் மக்கள் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் முஸ்லிம் எதிர்ப்புவாதக் கண்ணோட்டத்துடன் நோக்காமல் தமிழ் மொழியைப் பேசும் சகோதரர்கள் என்ற உணர்வுடன் சாதாரண முஸ்லிம் மக்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இஸ்லாமிய இளைஞர்கள் சிலர் சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்புகொண்டு இலங்கையில் நடத்துகின்ற பயங்கரத் தாக்குதல்களை முஸ்லிம் மக்களுடனும் ஒப்பிட்டுப்பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அதேவேளை, 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் பூகோள அரசியலில் இலங்கை சிக்குண்டுள்ளது. அமெரிக்க இந்திய உறவும் இந்திய பாகிஸ்தான் மோதலும் சீனா பாகிஸ்தான் உறவை பலப்படுத்தியது என லாம். ஆகவே இதன் பின்னணியிலும் இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை நோக்க முடியும். ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்காக இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள்தான், தமிழ் முஸ்லிம் உறவை சீர்குலைத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியதாக அன்று விமர்சகர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். அதேபோன்று தற்போது தமிழ் மக்களிடையே சைவம், கிறிஸ்தவம் என்ற பிரிவினை கூட சில வெளிநாட்டுச் சக்திகளினால் தூண்டிவிடப்படுகின்றது. இவ்வாறான நிலையிலேதான் சீனா, பாகிஸ்தான் நாடுகளின் அணுகுமுறை வேறானதாகக் காணப்படுகின்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது தமிழ் கிறிஸ்தவர்கள்தான். நீர்கொழும்புத் தேவாலயத்தில் கொல்லப்பட்ட சிங்கள மக்கள் கூட மூன்று தசாப்த்தங்களுக்கு முன்னர் தமிழர்களாகவே இருந்தனர். எனவே பரம்பரைச் சிங்களக் கிறிஸ்தவர்கள், சிங்கள பௌத்த மக்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் அது இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் மிக மோசமான தாக்குதல்களுக்கு உள்ளாகியிருப்பர். ஆகவே இலங்கை அரசியல் சூழலையும் நன்கு அறிந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனவே வெளிச் சக்திகளின் பிரித்தாளும் தந்திரங்களுக்குள் தமிழ் முஸ்லிம் மக்கள் எடுபட்டுவிடக்கூடாது என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# எமது ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்

## குருக்களிடம் யாழ்.ஆயர் பணிப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள இவ் அசாதாரண நிலைமையினால் பொது இடங்களில் மக்களின் பாதுகாப்பு உறுதியற்ற நிலையில் உள்ளது.

எனவே மக்கள் ஒன்றுகூடும் பொது இடங்களாகிய தேவாலயங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், சந்தைகள் என்பவற்றில் எமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்தவேண்டி உள்ளது. ஆகவே ஆலய அருட்பணிச் சபையினர், பக்திச் சபையினர் பங்குத்தந்தையின் ஆலோசனையுடன் வழிபாட்டிற்கு முன்னர் ஆலய சுற்றாடலின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

வழிபாட்டுக்கு முன்னரும் பின்னரும் ஆலயச் சுற்றாடலை நன்கு அவதானிக்க வேண்டும். புதியவர்களின் நடமாட்டத்தின் மட்டில் விழிப்பாக இருந்து காவல்துறையின் உதவியுடன் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டும்.

ஆலயங்களில் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்கக் கூடிய பாதுகாப்புச் சூழல் இருப்பின் மட்டுமே திருப்பலிகளை ஒப்புக்கொடுக்கலாம்.

மேலும் பாடசாலைகளில் பெற்றோர், ஆசிரியர்கள் - அதிபர்களின் ஆலோசனையுடன் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவவேண்டும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை 02.05.2019 அன்று யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான கூட்டத்திலேயே யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இவ் வேண்டுகோளை பங்குத் தந்தையர்கள் ஊடாக இறைமக்களுக்கு விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் யாழ் மறைமாவட்டத்தின் பல ஆலயங்களில் வழிபாட்டின்போது காவல் துறையினரின் பிரசன்னம் ஆலய வளாகத்தில் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

# சகவாழ்வுக்கான யாழ். மக்களின் ஒன்றியம் உதயம்

கடந்த ஈஸ்டர் தினத்தில் நாட்டிலே இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலே பணியாற்றும் மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள் இணைந்து **"சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியம்"** என்ற அமைப்பினைத் தோற்றுவித்துள்ளனர். பல்வேறு உரையாடல்களின் மூலமாக உதயமாகிய இந்த அமைப்பு சகவாழ்வு, பன்மைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பிலே தொடர்ச்சியான உரையாடல்களையும், செயற்பாடுகளையும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இவ்வமைப்பானது பாதுகாப்புப் படையினரும், ஊடகங்களும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பார்வையையும் செயற்பாடுகளையும் தூண்டக்கூடாது என்பதையும் வெகுவாக வலியுறுத்தி நிற்கின்றது.

இவ்ஒன்றியமானது அங்கிலிகன் திருஅவையின் வடமாகாண குருமுதல்வர் அருட்பணி சாம் பொன்னையா, யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் பல ஒன்றுகூடல்களை யாழ் பள்ளிவாசல், யாழ் மறைக்கல்வி நடுநிலையம், பரியோவான் கல்லூரி போன்ற இடங்களில் ஏற்கனவே நடாத்தியுள்ளது.

# பிரி.வெஸ்மினிஸ்ரர் பேராயரின் துயர் பகிர்வு

பிரித்தானியாவின் வெஸ்மினிஸ்ரர் மறைமாவட்டப் பேராயர் கருதினால் வின்சன் நிக்லஸ் ஆண்டகை இலங்கையில் உயிர்த்த தினத்தில் நடைபெற்ற பயங்கர கொலைவெறித் தாக்குதல் குறித்துத் தமது ஆழ்கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

உயிர்ப்புவிழாத் திருப்பலியில் பங்குகொண்டோர் மீதும் விடுதிகளில் தங்கியிருந்தோர் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலில் இறந்தோர்களின் ஆன்மாக்கள் இறைவனில் இளைப்பாற பிரார்த்திப்பதாகவும், காயமுற்றோர் இறை வல்லமையில் விரைவில் நலம்பெற வேண்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இத் தாக்குதலை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இவ் இக்கட்டான வேளையில் துயர்கொண்டுள்ள இலங்கை வாழ் மக்களுக்கு தமது செபங்களைத் தெரிவிப்பதுடன், விசேடவிதமாக பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்களுக்கும் தமது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீகத் தந்தை அருட்பணி எல்மோ அருள்நேசன் அடிகளாருக்கு கருதினால் அனுப்பி வைத்த மின்னஞ்சலில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## இது போன்ற துன்ப அனுபவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்று தசாப்தகாலப் போரின் பின்னர் அரசியல் நோக்கம் கொண்டு நடத்தப்பட்டது என்றும் குறிப்பாக கிறிஸ்தவ மதத்தினரை நோக்கி நடத்தப்பட்டவை என்றும் எண்ணப்படும் இந்தத் தாக்குதல்கள் அர்த்தமற்றவை. இந்தத் தாக்குதல்களை மிகவும் கடுமையாகக் கண்டிக்கிறோம். அதில் ஈடுபட்டவர்கள் யாராயினும் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு உரிய விதமாகத் தண்டிக்கப்பட வேண்டும். இதில் அரசு இதயசுத்தியுடன் செயற்பட்டு நீதியையும் அமைதியையும் உடன் நிலை நிறுத்தி இது போன்ற சம்பவங்கள் இனி ஒருபோதும் நடைபெறாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறோம்.

இலங்கை மண் இது போன்ற துன்ப அனுபவங்களை மிக அதிகமாகவே அனுபவித்துள்ளது. இனியும் இது போன்ற துன்ப அனுபவங்கள் எமக்கு வேண்டவே வேண்டாம் என சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மிகமிக அன்பாக வேண்டுகிறோம். தனிப்பட்ட அரசில் அல்லது வேறு இலாபங்களுக்காக மனித உயிர்களுடன் விளையாடாதீர்கள். இதில் ஈடுபட்டவர்களே இறைவன் உங்களுக்கு உரிய தீர்ப்பு தருவார் என்பதை மறக்காதீர்கள். இதனால் நாட்டின் பொருளாதாரம், சுற்றுலாத்துறை, அமைதி, பாதுகாப்பு என்பன கேள்விக் குறியாக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வு என்பனவே பாதிப்படையும். இன மத தேசிய ஒற்றுமையையும் பாதுகாப்பையும் உடன் நிலை நிறுத்த அரசிடமும் சம்மந்தப்பட்ட அனைவரிடமும் மிக அன்பாக வேண்டுகிறோம். என ஆயரின் அறிக்கை அமைகிறது.

## பங்கு மட்டத்திலான திருவிவிலிய அறிவுப் போட்டி 12.05.2019

கடந்த மாதம் 27.04.2019 அன்று நடைபெறவிருந்த திருவிவிலிய அறிவுப் போட்டியானது எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12.05.2019 அன்று ஒவ்வொரு பங்குகளிலும் ஞாயிறு மறைக்கல்வி வகுப்பு நேரத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**சிந்திக்க ஓர் சித்திரம்**



# இனம் மதம் மொழி கடந்து ஒன்றிணைந்து வன்முறைக் கலாசாரத்தை ஒழிப்போம்

**நாட்டில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்கள் குறித்து யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கை**

கிறிஸ்தவ மக்களின் புனித வழிபாட்டுக்குரிய நாளான ஈஸ்டர் நாளில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் மனித நேயம் கொண்ட அனைவரினது இதயத்தையும் சுக்குநூறாக்கியுள்ளது. மனஅமைதி வேண்டி வாழ்வில் செழுமை வேண்டி இறைபிரார்த்தனையில் ஈடுபட்ட வேளை நடைபெற்ற குண்டுத்தாக்குதல்களினால் உறவு-களைத் தொலைத்து அல்லலுறும் அப்பாவிகளின் இடத்தில் எம்மை வைத்து உணரும் போது இதயத்தின் வேதனை இன்னும் இரட்டிப்பாகின்றது ஏனோ தெரியவில்லை இலங்கைத் தேசத்தில் ஏப்ரல் மே மாதங்கள் கடந்த சில வருடங்களாக பெரும் அனர்த்தங்கள் இடம்பெறும் மாதங்களாக மாறிவருகின்றன. இயற்கை அனர்த்தங்க ளால் ஏற்படும் நெருக்கடிகள் தாண்டி நீண்ட இடை வெளிக்குப் பின்னர் மனித செயற்பாடுகளினால் விளைந்த கொடூரத்தால் பலநூறு உயிர்கள் காவு கொள்ளப்பட் டுள்ளன.

அழகிய நமது தேசத்தின் வனப்பை இரசிக்க வருகைதந்த வெளிநாட்டவர்கள் பலரும் இக் கொடூரத்தில் கொல்லப்பட்டமை நமது நாட்டை அச்சத்துக்குரிய பிரதே சமாக உலக அரங்கில் மாற்றுவது இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் இன்னல் தரும் விடயமாகும். இயற்கை வளமும் ஏனைய நாடுகளின் நட்பும் இயல்பாகக் கொண்ட நமது நாடு இமயத்தின் எல்லையையும் இலகுவாகத் தொடர முடியும். இருந்தும் காலத்துக்குகாலம் ஏற்படும் பிற்போக்குத்தனமான வன்முறைகளினால் தொடர்ச்சியாக அழிவைச் சந்தித்து வரும் அழகிய இத் தீவு அமைதியிழந்து போவது குடிமக்கள் அனைவருக்கும் ஆபத்தானது.

அதற்கும் அப்பால் ஒரு சில தீவிரப்போக்குக் கொண்ட வன்முறையாளர்களினால் ஒரு ஒட்டுமொத்த இனக் குழுமத்தின் மீதும் ஏனையவர்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படும் இயல்பைக் கடந்து செல்வது என்பதும் இலகுவில் முடியக்கூடிய காரியமில்லை. இது நீண்ட தீர்க்க முடியாத வன்மங்களுக்கு வழி செய்து விடும். எனவே ஆளுமை யும், ஆற்றலும் கொண்ட நமது அரசியல் தலைவர்கள் தற்போதைய நெருக்கடியை நாட்டின் நன்மை கருதி மிகவும் சாணக்கியமாக அணுக வேண்டியது அவசியமா னது. இதனை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளாக முன்வைக்கின்றோம்.

கொரடூரத் தாக்குதலினால் கொல்லப்பட்ட அத்தனை உறவுகளின் ஆத்மா அமைதியடையவும் காயப்பட்டவர்கள் விரைவில் நலம்பெறவும் உறவுகளை இழந்தவர்கள் தேறுதல் அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உலகம் வாழ் தமிழ்ச் சமூகத்தின் சார்பில் இவ்வாறான சம்பவங்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட அனைத்து உறவுகளின் துயரிலும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

பொதுப் பகை வெல்ல உட்பகை களைந்து
ஒன்றிணைவோம்.
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

## இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் சிறப்புச் செய்தி வெளியீடு

உயிர்ப்பு ஞாயிறு தினம் நடந்த கொடூரமான சோக சம்பவங்களால் இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவை மிகவும்வருத்தம்அடைந்துள்ளது. மூன்றுதேவாலயங்கள் மற்றும் அப்பாவிக் குடிமக்களை இலக்காகக் கொண்டு சில இடங்களில் நடாத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலில் 200 இற்கும் அதிகமானவர்கள் பலியாகி யும் பல நூற்றுக்கணக்கானோர் கடும் காயங்களுக்கும் உள்ளாகியுமுள்ளனர். ஈஸ்டர் பண்டிகையான புனித நாள் ஒன்றில் இறைமக்கள் வழிபாடு செய்து கொண்டி ருந்தபோது தேவாலயங்களின் மீது தாக்குதல் நடந்தமை என்பது உண்மையில் மிகவும் கொடூரமான செயலாகும்.

இவ் இக்கட்டான காலத்தில் இறைமக்கள் அமைதியாகவும், விவேகத்தோடும் அக்கறையோடும் செயற்படுமாறு நாம் வேண்டி நிற்கின்றோம். அரசாங்கம் உடனடியாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு எம் நாட்டில் வாழும் எல்லா இன மக்களினதும் பாதுகாப்பான வாழ்வை உறுதி செய்யவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இவ் அனர்த்தத்தில் ஆழ்துயர் கொண்டுள்ள அனைத்து குடும்பங்களுடனும் ஆன்மீக ரீதியாக உடனி ருக்கின்றோம். மற்றும் உயிர் இழந்த ஆன்மாக்கள் இறைவனில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின் றோம். காயமுற்ற அனைவரும் விரைவில் குணமடைய வேண்டுமென அக்கறையுடன் செபித்து வருகின்றோம்.

அப்பாவி மக்கள் மீது வன்முறையை கட்ட விழ்த்து விடுபவர்களின் கடின இதயங்களை மாற்றுமாறு இறைவனிடம் வேண்டவேண்டிய கடப்பாடும் நமக்கு உண்டு. பிறர் துன்பத்தை ஏற்று முழுமனித மீட்புக்காக தம்மை அர்ப்பணித்த இயேசுக் கிறிஸ்துவின் போத னைகள் மற்றும் வாழ்வின் முன்மாதிரிகளைப் பின் பற்றுவதன் மூலம், நாம் இரக்கமுள்ள இதயத்தைப் பெ-றவும் செபத்தில் நீதியுடனான மனிதநேயத்தைத் தேடவும் வரம்வேண்டுவோம்.

## இந்திய ஆயர்பேரவையின் இரங்கல் செய்தி

இந்திய ஆயர் பேரவையின் தலைவரும், கோவா மறைமாவட்டத்தின் பேராயருமாகிய பேரருட்திரு. பிலிப் நேரி பேரோ அவர்கள் இந்திய ஆயர் பேரவை சார்பாக உயிர்ப்பு விழா தின அனர்த்தம் குறித்து தமது இரங்கல் செய்தியையும், கண்டனத்தையும் இலங்கை வாழ் கத்தோலிக்க திருஅவைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவ் இரங்கல் செய்தியில் இக் கொடூர தொடர் குண்டுவெடிப்புக்களினால் இறந்துபோனவர்களுக்கு ஆன்ம இளைப்பாற்றி கிடைக்கவும், காயமடைந்த வர்கள் விரைவில் சுகம் பெறவும் மன்றாடுவதுடன் இவ்விக்கட்டான காலகட்டத்தில் தமது தோழமையை தெரிவிப்பதுடன் இத்துன்பத்தில் தாம் உடன் இருப்ப தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இறை இரக்கத் திருநாளாகிய 28.04.2019 அன்று செப நாளாக இந்தியத் திருஅவை பிரகடனம் செய்து அன்றைய விசுவாசிகள் மன்றாட்டில் இலங்கையில் பாதிக்கப்பட்டோரின் நலனுக்காக வேண்டுதல் செய்யவும் இந்திய ஆயர்பேரவை பணித்துள்ளது.

இந்திய அனைத்து மறைமாவட்டங்களிலும் ஆயர்களின் தலைமையில் மெழுகுவர்த்தி ஊர் வலங்களை ஒழுங்கு செய்து அயல்நாடாகிய இலங்கை யில் பாதிக்கப்பட்டோருக்காகவும், அந்நாட்டின் அமை திக்காகவும், இந்திய ஆயர் பேரவை தீர்மானித்து அறிவுறுத்தியுள்ளதாக அக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிய ஆயர் பேரவையும் கண்டனம்**

இலங்கையில் உயிர்ப்பு விழா அன்று நடைபெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களுக்கு ஆசிய ஆயர் பேரவையானது தமது ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்ததோடு கொல்லப்பட்ட மக்களின் உறவுக ளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## அவுஸ்திரேலிய கத்தோலிக்க ஆயர் பேரவை துயர்கொள்கின்றது

**உயிர்ப்பு ஞாயிறுதின வன்முறைத் தாக்குதல் குறித்து அவுஸ்திரேலிய கத்தோலிக்க ஆயர் பேரவையா-னது தமது ஆழ் துயரத்தையும், கண்டனத்தையும் தெரிவித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையாவது:**

இத்துன்பகரமான வேளையில் உங்களுடனும் உங்கள் மக்களுடனும் சிறப்பாகக் கத்தோலிக்கர்களுடனும் அன்பு கலந்த தோழமையை தெரிவிப்பதுடன், இன்றைய கொடுரத் தாக்குதலுக்கு உள்ளானோர் இத்துன்பத்திலி ருந்து மீள் எழ எமது செபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்படிப்பட்ட வன்முறை எப்போதும் கோரமானவையே. ஆனால் இப்படிப்பட்ட வன்முறை யானது பக்தர்களின் மத்தியில் அதுவும் உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் நடைபெற்றமை சாத்தானின் செயலே.

யார் இதைச் செய்தார்கள்? ஏன் இதைச் செய்தார்கள்? என எமக்கு இதுவரை தெரியாது. ஆனால் இப்பேற்பட்ட வன்முறையானது நிச்சயம் ஓர் நிரந்தர முடிவைத் தராது. இதை இயேசுவின் உயிர்ப்பு உணர்த்துகின்றது.

இலங்கை வாழ் மக்கள் கடந்த ஆண்டுகளில் சொல்லொனா துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள். அவர்கள் இவ் அசாதாரண வேளையில் இத்துன்பத்தைத் தா்ங்கும் மனோவலிமையை கொண்டுள்ளனர் என்பதை காண்பித்துள்ளனர். கத்தோலிக்கர் மட்டில் உள்ள இறை விசுவாசமே அவர்கள் இத்துன்பத்தைத் தாங்கும் மன நிலையை கொண்டிருப்பதற்குக் காரணம் என்றால் அது ஐயமில்லை. இதுவே அவர்களின் இத்துன்பத்தின் பலமும் கூட. அவுஸ்திரேலிய ஆயர்களாகிய நாம் இலங்கை வாழ் மக்களுக்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவவும், ஆதரவு தரவும் காத்திருக்கின்றோம். உயிர்ப்பு ஞாயி-றாகிய இன்று அமைதியின் ஆண்டவர் உங்களோடும், எல்லா இலங்கை வாழ் ஆயர்கள், இறைமக்களுடனும் உடனிருப்பாராக என ஆயர் பேரவைத் தலைவரும் பிறிஸ்பென் பேராயருமாகிய பேரருட்திரு மார்க் கொலரி டச் அவர்களின் கையெழுத்துடன் இவ்வறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.

## துயர் பகிர்கின்றோம்



அமலமரித் தியாகி கள் சபையைச் சேர்ந்த
**அருட்பணி J.S.ஜீவனதாஸ் பெர்னாண்டோ**
அடிகளார் 16.04.2019 அன்று மாரடைப்பினால் காலமானார்.

அமரர் அருட்பணி ஜீவனதாஸ் அடிகளார் யாழ் மறை மாவட்டத் தின் சில பங்குத்தளங்களிலும், புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும் பகுதி நிலைத் தலை-வராகவும், விடுதிக் காப்பாளராகவும் பல ஆண்டு காலம் பணியாற்றினார். பின்னர் திருகோண மலை புனித சூசையப்பர் கல்லூரியில் பத் தாண்டுகளுக்கு மேலாக அதிபராகவும் பணியாற் றினார். கல்விப் பணியிலும், சமூகப் பணிகளிலும் பெரும்பணியாற்றிய அடிகளார் பலரது நெஞ்சங்களில் என்றும் வாழ்கின்றார்.

அடிகளாரின் மறைவில் துயருற்றிருக்கும் அவரு-டைய அன்புறவுகளுக்கும், அமலமரித் தியாகிகள் சபையினருக்கும் பாதுகாவலன் அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது. அடிகளாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாறுவதாக!

# இலங்கை குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு

## தஞ்சை பேராலயத்திலும் திருச்சியிலும் மும்மதத்தினர் அஞ்சலி

**தஞ்சையில்...**

இலங்கையில் கடந்த வாரம் கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்தனர். இலங்கைக் குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி தஞ்சை திரு இருதய பேராலயத்தில் நேற்று மாலை நடந்தது.

இதில் பேராலயப் பங்குத் தந்தை இருதயராஜ் அடிகளார் ஜிம்மாப் பள்ளிவாசல், இம்மா மற்றும் ஜமாக்துல் உலமாக்கள் சபைத் தலைவர் ஹயா மைதீன் திருவருள் பேரவை தியாகராஜன், தமிழ்நாடு



சிறுபான்மை மக்கள் நலக் குழுவினர், அறநெறி மக்கள் கட்சியினர், கிறிஸ்தவ நல்லெண்ண இயக் கத்தினர், அனைத்துக் கிறிஸ்தவ அமைப்பினர் என மும்மதத்தினரும் பங்கேற்று மெழுகுவர்த்தி ஏந்தி பேராலய வளாகத்திற்குள் ஊர்வலமாகச் சென்றனர்.

**திருச்சியில்...**

இலங்கையில் வெடிகுண்டுத் தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்கு திருச்சியில் கிறிஸ்தவ அமைப்பு சார்பில் 1000 இத்திற்கும் மேற்பட்டோர் மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறு அமைதி ஊர்வலம் நடாத்தினர்.

இஸ்லாமிய அமைப்புக்கள், மனிதநேய அமைப்புக்கள் எனப் பல அமைப்புக்களைச் சார்ந்தோர் இவ் ஊர்வலத்தில் அமைதி வேண்டிப் பங்கேற்றனர். இவ் ஊர்வலத்தில் திருச்சி ஆயரும், குருக்கள், துறவி கள் மற்றும் இறைமக்கள் எனப் பெருந்தொகையில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏன் இப்படி?

அருட்பணி ஜீவா போல் அ.ம.தி


மனித வாழ்வில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு பொருள் தேடுவது மனித இயல்பு. அது ஒரு தேவையும் கூட. இரண்டாம் உலகப்போரின் போது மனித வதை முகாமில் துன்புற்று இருந்த விக்டர் பிரான்கில் (Viktor Frankl) என்னும் உளவள மேதை மனித வாழ்வின் பொருள் தேடல் (Man's search for meaning) என்னும் நூலை எழுதியுள்ளார். அவரது வருகைக்காக வழி மீது விழி வைத்துக் காத்திருந்த அவரது அன்பு மனைவி மீது அவர் வைத்திருந்த பாசமே வதை முகாமில் அவர் அனுபவித்த தாங்கொணா துயரத்திற்கு அர்த்தம் கொடுத்தது என்று அந் நூலில் கூறுகிறார். துன்பங்களையும் தாண்டிச் செல்ல அன்பு என்ற சக்தியே மன வலிமையைக் கொடுத்தது என்று தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறார்

கடந்த உயிர்ப்பு ஞாயிறு அன்று தேவாலயங்களில் வழி வழிபாட்டிற்கென கூடி இருந்த இறை மக்கள் மீது ISIS என்னும் தற்கொலைத் தீவிர வாதிகள் நடாத்திய தாக்குதல் 250 ற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டது. 500 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களைக் குற்று யிராக்கியது.

இலங்கை வரலாற்றில் இது போன்ற துன்பமும் இழப்பும் முதன்முதலாக இடம்பெற்றது அல்ல. 30 வருட இன ரீதியான யுத்த காலத்தில் ஆலயங்களிலும், வைத்திய சாலைகளிலும், பாட-சாலைகளிலும், சிறுவர் இல்லங்களிலும் குண்டுத் தாக்குதல்களுக்கு உட்பட்டு பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டது. யார் இத்தகைய கொடுமைக்குக் காரணம் என்று அரசியல், பொருளாதார, சமய ரீதியான ஆய்வை இங்கு செய்ய முற்படவில்லை. இப்படு கொலைகளுக்கும் உடலிலும் உள்ளத்திலும் அப்பாவி மக்கள் அனுபவிக்கும் தாங்கொணா துயரங்களுக்கும் விடை தான் என்ன? என்று எம்மில் பலர் கேள்வி எழுப்புகின்றோம்.

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறு தல் தருவேன்."( மத்தேயு 11:28) இயேசுக் கிறிஸ்துவின் இவ் இறைவாக்கில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்களாக இறை மக்கள் ஆலயங்களில் ஒன்று கூடுவார்கள்.இறைவனை நாடுவார்கள். இறைவனின் கருணையை வேண்டி நிற்பார்கள். இவை அனைத்தும் இறை மக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

அதிலும் ஏப்ரல் மாதம் 21 ம் நாள் சாவை வென்ற உயிர்ப்பு இயேசுவின் பெருவிழா மகிழ்ச்சியில் கலந்து வாழ்வை நம்பிக்கையுடன் எதிர் நோக்க ஆவ-லோடு ஒன்று கூடிய மக்கள் கூட்டத்தில், தற்கொலைத் தாக்குதல் ஆலயங்களில் கூடியவர்களுக்கு மட்டுமல்ல முழு திருஅவைக்கும்., நாட்டு மக்களுக்கும்,



ஏன் சர்வதேசத்திற்குமே பெரும் அதிர்ச்சியையும், குழப்பத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**பலரின் மனங்களில் ஏன் இவர்களுக்கு, ஏன் இந்த நாட்டிற்கு, ஏன் இப்படி என்ற ஏராளமான கேள்விகளை எழுப்பியுள்ளது.**

விஞ்ஞானமும் அறிவியலும் தொழில்நுட்பமும், தொடர்புச்சாதனங்களும் வளர்ச்சியடைந்த இக் கால கட்டத்திலும் துன்பத்திற்கு முழுமையான விடை இன்னும் கிடைக்கவில்லை. துன்பத்தைப் போக்குவதற்கும், அதிலிருந்து மனித மனங்களை ஆற்றுப்படுத்துவதற்கும், துயரங்களிலிருந்து விடுபடுவதற்கும் பல வழிகள் உண்டு. உயிர்ப்பு ஞாயிறு அன்று ஏற்பட்ட ஆபத்துப் போன்று மீண்டும் இப்பயங்கர நிகழ்வு இடம் பெறாதிருக்க பல நாடுகளுடனும், உள்ளூர் திறமைசாலிகளுடனும் இணைந்த ஒரு கூட்டு முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருப்பது ஒரு விதத்தில் ஆறுதல் தருகிறது.

மனித இழப்புக்களை சந்தித்த உறவுகளுக்கு ஆறுதலும் உதவிகளும் செய்த நல்ல உள்ளங்கள் போற்றுதற்குரியது. உடலாலும், உள்ளத்தாலும் படுகாயமுற்று வேதனைப்படும் சகோதர சகோதரிகளைப் பராமரித்து, புண்களை ஆற்றும் உடன் பிறப்புகள் செய்யும் சேவை மகத்தானது.

ஏன் இவர்களுக்கு? ஏன் இப்படி?

என்ற கேள்விகளுக்கு தனி மனிதன் செய்யும் பாவமும், குற்றமும், தவறும் தான் அவனது துன்பத்திற்கும் மரணத்திற்கும் கரண்ம் என்பது விவிலியம் கூறும் பதிலல்ல. தொடக்க நூலின் ஆசிரியர், சாவும் துன்பமும் எப்படி இவ் உல-கில் நுழைந்தன என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில், இறைவன் இவ்வுலகத்தை படைக்கையில் அதனை அழகானதும் நல்லதுமாகக் கண்டார். அதிலும் மனிதனைப் படைக்கையில் மிக நல்லதெனக் கண்டார்.



ஆனால் மனிதர் கொண்ட அகங்காரத்தினாலும், பொறாமையினாலும், சந்தேகத்தினாலும், அறியாமையினாலுல் பிறந்ததே துன்பமும் சாவுமாகும். எனவே உயிர்ப்பின் நாளில் நம் நாட்டில் இடம்பெற்ற சாவும் துன்பமும் இதற்கு முன்னய காலங்களில் ISIS தீவிர வாதிகளால் ஏற்படுத்திய கொலைகளும், அழிவுகளும் மனித குலத்தின் ஒட்டு மொத்தமான பாவத்தின் விளைவு. இதற்கு காரணம் மனிதனே.

புனித வாரத்தில் ஆண்டவர் இயேசு உடலாலும், உள்ளத்தாலும் பட்ட வேதனைகளும், அவர் எதிர் கொண்ட சாவும், குற்றமற்றவர்கள் சந்தித்த துன்பங்களையும், சாவு அனுபவங்களையும் ஒத்ததாகும். மனித இனத்தின் மீட்புக்காகவும், அவர்களது விடுதலைக்காகவும் குற்றமற்றவர்கள் கொடுக்கும் விலையா-கும் என்று எம் மத்தியில் இன ரீதியாகவும், மத ரீதியாகவும், மொழி ரீதியாகவும் வளர்க்கப்படுகின்ற குரோதங்களும், பழியும் நீங்கி அவற்றிற்கு என்று சாவு மணி அடிக்கப்படுகிறதோ அப்பொழுது தான் மனிதம் உயிர் பெறும் . உயிர்ப்பின் அமைதியையும் மகிழ்ச்சியையும் மக்கள் அனுபவிக்க முடியும்.

"கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்" என்னும் பழைய போதனைகள் ஒழிந்து, "பகைவர்களையும் அன்பு செய்யுங்கள்" என்ற இயேசுவின் போராட்டம் மீண்டும் உயிர்ப்புப் பெறவேண்டும். கொல்லப்படுவதற்கு தம்மை மனமுவந்து கையளித்த இயேசுவை, தந்தையாகிய கடவுள் கல்லறையில் இருந்து உயிர்ப்பித்தார்.

அப்பாவி மக்களின் குருதி, கல் நெஞ்சர்களை உருக வைக்கும் என்பது எமது நம்பிக்கை. சில வருடங்க்ளுக்கு முன் சீரியாவில் த்லைகொய்யப்பட்டு, கிறிஸ்துவுக்காக உயிர் துறந்த இரு புதல்வர்களின் தாயிடம் அபிப்பிராயம் கேட்டபோது" அக் கொலைகாரர்களை தன் இல்லத்திற்கு வரவழைத்து அவர்களின் மன மாற்றத்திற்காக வேண்டுதல் செய்வேன் என்று அத் தாய் கனிவுடன் பதில் அளித்தார். வன்முறை வன்முறையை பிறப்பிக்கும். மாறாக ,

"ஆண்டவரே . அமைதியின் கருவியாய் என்னை ஆக்கிடுவீர்" இவ்வாறு புனித பிரான்சிஸ் அசிசியாரின் வார்த்தைகளில் வேண்டுதல் செய்வதும், எமது சொல்லாலும் செயலாலும் அமைதிப் புரட்சியை எம் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்ப நாம் வாழும் சூழலில் ஏற்படுத்துவதே **ஏன் இப்படி** என்ற கேள்விக்கு விடையாகவும் அமையலாம். ●

---

# நாம் பறிகொடுத்த உறவுகள் எம்முணர்வுகளுடன் கலந்து விட்டார்கள்

*"ஆலயம் செல்லடா... ஆனந்தம் கொள்ளடா"* எனும் கவி வரிகள் அனுபவத்தில் அரத்தமுள்ளதாக நாம் உணர்ந்து கொண்ட நாட்கள் இன்று எம்மை கடந்து சென்று விட்டன. "ஆலயம் செல்லாதீர் ஆபத்தை நெருங்காதீர்" என கேட்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அதிகாலையில் கோயில் மணி கேட்டு கண்விழித்த நாம் எமது முதல் வேலையாக ஆண்டவனிடம் செபிக்க ஆலயம் செல்வது முன்னோர் எமக்குக் கற்பித்துத் தந்த நற்பழக்கங்களில் ஒன்றாகும். அதனைக்கூடச் செய்யவிடாமல் செய்யும் நிலை வரும் என நாம் கனவில் கூட நினைக்கவில்லை. ஆயினும் பல வேத சாட்சிகளின் இரத்தத்திலும், புனிதர்களின் தியாக வாழ்வினாலும், பல துறவற சபைக் குருகக்ளின், துறவிகளின் செபங்கலந்த அர்ப்பணமுள்ள வழிகாட்டுதல்களினாலும் எமது விசுவாச வாழ்வு போர்த்துக்கேய வருகையுடன் இலங்கை நாட்டில் கத்தோலிக்க திருமறையாக உதயமானது.

உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு தோன்றி கூறியது "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என்பதாகும். இயேசுவின் சீடர்களைத் தொடர்ந்து இன்று வரை எல்லா உலக நாடுக-ளிலும் கத்தோலிக்கர் வாழும் அளவுக்கு நற்செய்திப்பணி எடுத்துச் செல்லப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இத்தகைய சவால்கள் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களாகிய எமக்குத் தரும் முக்கிய செய்தி என்ன? இஸ்லாம் மதத் தீவிரவாதிகள் எம்மை அழிக்க முன்வந்து விட்டார்கள் என எம் ஆலயங்களைப் பூட்டி, கோயில் மணிகளை ஒலிக்காது செய்து நாம் வீட்டிற்குள் முடங்கிவிட முடியுமா?

எங்கெல்லாம் கிறிஸ்தவம் அழிக்கப்பட்டதோ அங்கெல்லாம் தற்போது கத்தோலிக்கம் திருஅவைகளாக வளர்ந்துள்ளது. காரணம் அங்கு மரணித்தவர்களின் இரத்தமும், புனிதமான தியாக வாழ்வும், இறைவனின் வலிமையான கரமும் செயலாற்றியமையால் கிறிஸ் தவம் நிலைத்தது.

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கொலைக் குண்டுத்தாக்குதல் எமது விசுவாச வாழ்விற்கு புதிய




அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

அத்தியாயத்தைத் தொடங்குவதாக அமையட்டும். கிறிஸ்து உயிர்ப்பு விழாவில் நிகழ்ந்த இந்த அசம்பாவிதம் நாம் ஒடுங்கிப் போகவல்ல. மாறாக எமது சொந்த உறவுகளின் இரத்தத்திலிருந்து விழித்தெழுவோம். நாம் பறிகொடுத்த ஒவ்வொரு உறவுகளும் வேதசாட்சிகளாக திருச்சபை வரலாற்றில் பொறிக்கப்படுவர். இவர்கள் இறந்தாலும் எம்முணர்வுகளுடன் வாழ்கின்றார்கள்.

இறைவனைத் தேடி வந்த பலர் ஆலயத்திலே தம் உயிர்களைப் பறிகொடுத்தும், அங்கவீனமாக்கப் பட்டும், காயப்பட்டும் துயரங்களிற்கு உள்ளாகியும் உள்ளனர். உயிர்த்த இயேசு உயிருள்ளவராக இவை யாவற்றையும் அறிந்தவராக இருக்கின்றார். கத்தோலிக்க மக்களாக இவர்கள் சந்தித்த சவால்கள், தியாகங்கள் எமது விசுவாச வாழ்வை ஆழப்படுத்த வேண்டும். எமது சாட்சியமுள்ள வாழ்வினால் கிறிஸ்துவை இன்னும் அதிகமாகப் பறைசாற்ற எமக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

- ஆலயம் போக முடியாவிட்டாலும் எமது இல்லங்களில் அன்பு, இரக்கம், மன்னிப்பு, அமைதி நிரம்பிட வாழ்ந்திடுவோம்.
- எமது உள்ளங்களிலிருந்து பாவம், தற்பெருமை, அகங்காரம், கோபம், பழிவாங்கும் உணர்வுகள் என்பவற்றை அகற்றிடுவோம்.
- எம்முடன் வாழும் சகோதரரிடம் எம்மைத் தாழ்த்திக் கொள்ளவும் மன்னிப்புக்கோரவும் கற்றுக்கொள்வோம்.
- வாழ்க்கையில் எழ முடியாது வீழ்ந்து கிடப்பவனை தூக்கி விடுவோம். எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்வோம்.
- எமது சமூகத்தில் வாழும் இளம் சந்ததியினரை நல்வழி காட்டி, அறிவுரை கூறி சரியான பாதை காட்டிப் பலப்படுத்துவோம்.
- மொத்தத்தில் உயிர்த்த கிறிஸ்துவின் அருள் பெற்று வாழ்வில் புதிய கண்ணோட்டத்தோடு, புதிய உற்சாகத்துடனும் நேரிய சிந்தனைகளுடனும் எம் வாழ்வை முன்னெடுத்துச் செல்வோம். ●

# கிறிஸ்தவ தாராண்மையும் இஸ்லாமிய அடிப்படைவாதமும்



உள்ளத்தில் உள் வாங்கமுடியாத உயிர்ப்பு ஞாயிற்று கொடூர நிகழ்வால் கிறிஸ்தவ குடும்பம் மீள முடியாத பேரதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட நிகழ்வால் ஒருகிராமம் பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டது. மானிடத்துக்கு ஒவ்வாத காட்டு மிராண்டித்தனமான இப் படுகொலையில் பன்நாட்டுப் பங்களிப்பும் அதற்கு உடைந்தையான இலங்கை இஸ்லாமியரின் வகிபாகமும் பற்றி இக்கட்டுரை சிலாகிக்கிறது.

கடந்த பல நூற்றாண்டுகளாக சமயப்போர்களும் முரண்பாடுகளும் மதங்களுள் அங்குமிங்குமாக நடைபெற்றாலும் சமகாலத்தில் அதன் கோரமுகத்தின் தாண்டவத்தைக் காண்கிறோம். சமயங்களால் உருவாக்கப்பட்ட வன்செயல்களும் போர்களும் நிறுவன மயமாக்கப்பட்டுள்ளமை ஒரு பயங்கரச் சூழல். இது உலக அமைதிக்கும் மானிடவர்க்கத்துக்கும் மிகஆபத்தானது

### ஐ.எஸ் ஐ.எஸ் இயக்கம்:

ஈராக், சீரியா நாடுகளில் நிலைகொண்டிருந்த இஸ்லாமிய (ஐஸ்) அரசு இயக்கத்தின் கட்டமைப்பு இப்போது அழிக்கப்பட்டுவிட்டது. இதற்கு முதன்மைக் காரணம் சிரியாவிலுள்ள குர்திஸ் போராளிகள், ஈராக் இராணுவம் அங்குள்ள சியாயிட் படைகளுமே ஆகும். தலைவர் அபு பக்கர் அல் பக்தாதி ஆட்சிசெய்து வந்துள்ள சகல பிராந்தியங்களையும் இஸ்லாமிய அரசு இழந்து விட்டது. இஸ்லாம் மதம் சுனி - சியாயிட் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஈராக் சீரியா நாடுகளின் போராளிகள் சுனி பிரிவை சேர்ந்தவர்கள் ஐஎஸ்ஐஎஸ் இயக்கமும் சுனி பிரிவைச் சார்ந்தது.

தங்கள் மனதில் கொண்டுள்ள இஸ்லாமிய கருத்துருவத்திற்கும் ஏனைய சமய பண்பாடுகளுக்கும் இடையேயான நிரந்தர முரண்நிலையே இஸ்லாமிய அரசின் உலகபார்வையாக இருக்கிறது. இப் பார்வையே இளம் ஜிகாதிகளைத் தொடர்ந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறது. இஸ்லாமிய இராச்சியம் வீழ்ச்சியடைந்த போதிலும் அதன் ஆயிரக் கணக்கான தீவிரவாதிகள் தப்பிழைக்கின்றார்கள். இடிந்தழிந்து போன கோட்டை கொத்தளங்கள் மையத்திலிருந்து புற எல்லைகளில் அல்லது புறநாடுகளில் இருக்கக்கூடியபோரளிகளுக்கும்இடையே தொடர்பு முறையொன்று இருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

உலகில் எந்தப் பகுதியிலும் பயங்கரவாத வித்துகளை பரப்பி இஸ்லாமிற்கும் ஏனைய மதங்களுக்கும் இடையிலான கலாசாரப் போரொன்றை மூளவைப்பதே அவர்களது இலக்காகும். அது இத்தடவை இலங்கையில் நடந் திருக்கிறது. அடுத்த தடவை உலகின் வேறெந்தப் பகுதியிலும் நடக்கலாம்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் நாடுகளின் மீது தாக்குல்களை மேற்கொண்டு அரசியல் உறுதிப்பாடற்ற சூழலை உருவாக்கி மக்களின் அமைதியைச் சீர்குலைத்து தனது நோக்கங்களை அடைந்து கொள்ள முன்னெடுத்து வரும் செயற்பாடுகளாகவே இந்தத் தாக்குதல்கள் அமைகின்றன. முக்கியமாக அவர்கள் இந்தத் தாக்கு தலை மேற்கொள்வது மேற்குலக அரசியல் சிந்தனைக்கும் மேற்குலக சமய தத்துவத்துக்கும் எதிராகவே ஆகும். ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தின் தலைவர்கள் இற்றைக்கும் சில வருடங்களுக்கு முன்னர் வத்திக்கானில் தமது இயக்கத்தின் கொடி ஏறுகின்ற நாளே அந்த இயக்கத்துக்கு உண்மையான வெற்றி கிட்டிய நாளாகும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

### இஸ்லாம் / பிறமறைகள்

இஸ்லாமியர் எப்பொழுதும் இலங்கை அரசின் செல்லப்பிள்ளை! அரசியல் ரீதியாக நோக்குகையில் அரசி யல் சலுகையோடு வாழ்கிறவர்கள். வட-கிழக்கு மாகாணத்தின் தமிழரின் உரிமைப் போராட்ட காலத்தில் அரசோடு இணைந்து தமிழருக்கு எதிராகப் பங்காற்றியவர்கள். சில கட்டங்களில் யாழ் குடாநாட்டில்கூட முதன்மைக் குடிமக்களாக அரசினால் பயன்படுத்தப்பட்டவர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியது இங்கு ஏற்புடையது "1977 ஆம் ஆண்டு மற்றும் 1983ஆம் ஆண்டு இடம் பெற்ற இனக்கலவரங்களில் தமிழ் மக்களுக்கு கிடைத்திராத பாதுகாப்பு தற்பொழுது முஸ்லிம் மக்களுக்கு கிடைத்துள்ளவை தொடர்பில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்று தமிழ் மக்களுக்கு முறையிடுவதற்கு எந்தவொரு தலைமையும் இருக்கவில்லை புகார் செய்வதற்கு எந்தவொரு அரசாங்கமும் இருக்கவில்லை. அரசாங்கத்தினரே முன்னின்று கொ-டுமைகளை நடத்தியிருந்தனர். அதையிட்டு நான் இன்னும் கவலையடைகிறேன். வேதனையடைகிறேன்."

சிறுபான்மை மதங்கள் என்று

அருட்பணி அமிர்த யெயசேகரம்

நோக்குகையில் தமிழ் இந்துக்கள், தமிழ் கிறிஸ்தவர்களைவிட அரசினால் பிரத்தியேக சலுகைகள் பெற்று வாழ்பவர்கள் இஸ்லாமியர்கள். போர் முடிந்து 10 வருடங்கள கடந்தும் தமிழரை சந்தேகக் கண்கொண்டு பாக்கும் அரசு தனது பாதுகாப்பிற்கு எதிராக பல அச்சுறுத்தல்களிருந்த போதும் இஸ்லாமியர்கள்மீது வைத்த ஆழமான நல்லெண்ணம் 300 இற்கும் அதிகமான கிறிஸ்தவர்களைக் காவுகொண்டது மட்டுமல்ல ஜ.எஸ்.ஜ.எஸ். இயக்கம் இலங்கையை குண்டு வெடிப்பிற்கு தெரிவு செய்வதற்கும்மூலகாரணமாயிருந்திருக்கிறது. மற்ற சமூகங்களோடு சேர்ந்து வாழாது தனித்துவமாக வாழ விரும்புபவர்கள் சமய அடையாளங்களை பொது வாழ்வில் தங்கள் உடுப்புக்களிலும் பேச்சுகளிலும் பயன்படுத்தி நாட்டில் தாம் வேறுபட்ட மனிதர்கள் என்று காண்பிப்பதில் முனைப்புடன் உளர். தொடக்க காலங்களில் பெண்கள் தமிழ் பண்பாட்டில் வாழ்ந்து தமிழ் மொழி பேசி சேலை அணிபவர்கள் தற்பொழுது அரபு நாட்டின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுகிறார்கள்.

இலங்கை கல்வி அமைச்சினால் இஸ்லாமியர்களின் வழிபாடு நோன்பிற் கேற்ப பிரத்தியேகமான பள்ளித்தவணை விடுப்புகள் மாற்றப்படுவதையும் அவதானிப்பிற்கு உட்படுத்த வேண்டும். இலங்கைவாழ் கத்தோலிக்கர்கள் புதுவருட நாளாகிய ஜனவரி முதலாம் நாளை ஆலயவழிபாட்டின் ஆசீர் பெற்று புது வருடத்தை தொடங்கிறவர்கள். அந் நாளை அரசு விடுமுறை நாளாக அங்கரிப்பது இல்லை சில தடவைகள் அதே நாளில் பள்ளிகளும் ஆரம்பமாகும். எனவே மதங்கள் மத்தியில் சமச்சீர் அற்ற நிலையில் ஒரு சில மதங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதும் அடிப்படை வாதத்தை தூண்டிவிடுகிறது.

> "இப்பொழுது ஊடுருவும் இஸ்லாமிய அடிப்படவாதம் உலகைச் சீரழித்து சகோதரங்களாக வாழ்ந்த மக்கள் மத்தியில் பிரிவினைகள் பிளவுகளை உருவாக்கி இயல்பு வாழ்வை முடக்குகிறது. இச்சமய பிரிவினை-களை ஒடுக்குவதற்காகவே சமூக - அரசியல் வாழ்வில் சமயச் சார்பின்மை அறிமுகப்படுத்தப்பட்டது."

சமயச்சார்பின்மை - மதங்களின் அடிப்படைவாதம் காலம் காலமாக மக்களை நெறிப்படுத்துவதற்கு மார்க்சிய வாதம், பொதுவுடைமை, முதலாளித்துவம் போன்ற சித்தாத்தங்கள், கொள்கைகள் மக்கள் நலன்களை வளமாக்க உருவாக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஊடுருவும் இஸ்லாமிய அடிப்படவாதம் உல-கைச் சீரழித்து சகோதரங்களாக வாழ்ந்த மக்கள் மத்தியில் பிரிவினைகள் பிளவு-களை உருவாக்கி இயல்பு வாழ்வை முடக்குகிறது. இச்சமய பிரிவினைகளை ஒடுக்குவதற்காகவே சமூக - அரசியல் வாழ்வில் சமயச் சார்பின்மை அறிமுகப்படுத்தப்பட்டது.

சமயச் சார்பின்மைபற்றி கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்குலகம் பின்பற்றும் சமயச் சார்பின்மையை இங்கு இறக்குமதி செய்யக்கூடாது என்று கூறியுள்ளார். இதனால் ஏற்படும் அறநெறிப்பிறள்வுகள், மேற்குலக தாரள கொள்கையினால் ஏற்படும் கட்டுபாடற்ற தனிமனித விடுதலை வேட்கையை கருதி இதை வெளிப்படுத்தி இருக்கலாம்.

இருப்பினும் - தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பயங்கரவாதத்தை அடிப்படைக்கொண்ட கடவுள் நம்பிக்கை ஆளர்களைவிட, சமயச் சார்பின்றி வாழ்கிறவர்கள் சிறந்தது போல் தோன்றுகிறது. கடவுள் நம்பிக்கையாளர்கள் என்ற பெயரில் மத வெறிபிடித்து செய்யும் கொலைகளைவிட மனிதம் என்ற புனிதத்தை மையப்படுத்தி எழும் சிந்தனை துல்லியப்படுத்தப்பட வேண்டும். "உடலை விட உயிரும் உடையைவிட உடலும் முக்கியமானது" இறுதியாக தமிழர் நாம் சிறுபான்மை யினர் சமய ரீதியான இஸ்லாமிய சிறுபான்மை அனைவரையும் பயங்கரவாதிகளாக நோக்காமல் நாம் முன் கொண்டிருந்த உறவு நிலைக்கு நகர முயற்சி எடுக்க கிறிஸ்தவம் எம்மை அழைக்கிறது.

இக்குண்டு வெடிப்பினால் அரசியல் வரை படம் முற்றுமுழுதாக மாறி விட்டது. ஆட்சியாளர்கள் இதைத் தமக்கு சாதமாக எடுத்து சிறுபான்மையின் உரிமைகளை ஒடுக்குவதற்கு பச்சைக்கொடி காட்டுவதாக அமைகிறது. இஸ்லாமியரின் வெளிநாட்டு ஊடுருவலால் இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றது. தமிழருடைய நிலைமையிலும் தமிழ் நாடு, அலைத்துளைவு (டியாஸ்பொறா), ஐ.நா.மன்றம் போன்ற பன்நாடுகளின் தமிழருக்கான தலையீடுகள் அடிபட்டுப் போய்விட்டது...? •

## கறைபடிந்த வரலாறு





வரலாற்றின் ஏட்டினிலே வடிக்க வொண்ணா
வன்கொடுமைச் செயலாகும் மனித வாழ்வை
அரைகுறையாய் அழித்தொழித்த மிருகச் செய்கை
ஆண்டவனே மன்னிக்காப் பெரிய பாவம்
குறிவைத்தே ஒருசமூகந் தம்மி னோடு
கடல்தாண்டி வந்தவரும் கொலையுண் டார்கள்
அறிந்தறிந்தே செய்துள்ளார் அறிவற் றோர்கள்
ஆறாத துயர்தாங்கச் செய்திட் டாரே

சாந்தியொடு சமாதானம் போதிக் கின்ற
சன்மார்க்கக் குடைதாங்கி அரக்கர் கூட்டம்
சாந்தியொடு சமாதானம் போதிக் கின்ற
சன்மார்க்கம் தடுத்துள்ள செய்கை தன்னை
ஏன்துணிந்தார் செய்வதற்காம் இறைவன் சாபம்
ஏற்பதற்கா இரக்கமற்றோர் இடும்பை செய்தார்
வான்தரிக்கும் வல்லவனே மீண்டும் இந்த
வரலாறு காணாதெம் நாட்டைக் காப்பாய்

உயிர்ப்பித்த நாளிலிந்த உயிர்ப றிக்கும்
ஒவ்வாத செயல்தன்னைச் செய்த பொல்லார்
செயல்கண்டு பார்முற்றும் பழிப்ப தோடு
சோகத்தி லாழ்ந்துள்ள செய்கை கண்டோம்
உயிரொன்றைப் பறித்தாலும் ஒட்டு மொத்த
உயிரினத்தை அழித்ததனை ஒக்கு மென்ற
மெய்யுரையைப் புகன்றநபி போதந் தன்னை
மறந்ததென்ன மதப்பெயரில் கொடுமை செய்தோர்

ஏசுபிரான் தனையேற்றோர் இஸ்லாத் தோர்கள்
இக்கொடுமை செய்தவர்கள் இஸ்லா மற்றோர்
நாசமொன்றே அன்னவரின் கொள்கை எந்த
நல்லுளமும் இவர்செய்கை ஏற்க மாட்டா
வேஷமிட்டார் தோற்றத்தில் இதயம் பாலை
வரண்டநிலம் தோற்றுவிடும் தீப்பி ழம்பு
பாசபரி தாபமற்றோர் பண்பி லாதோர்
பண்ணவனே இவ்வுலகை இரட்சிப் பாய்நீ

முப்பதாண்டு யுத்தத்தில் நலிந்த பூமி
மீண்டுமொரு உயிரழிப்பில் முடங்கிப் போகத்
தப்பென்ன செய்தோம்நாம் தொடர்ந்தால் நாங்கள்
தாங்கோமே தூயவனே காப்பாய் எம்மை
அப்பாவி உயிரினங்கள் அழிவ தாமோ
அருள்செய்யும் ஆதியேநீ அழிவு செய்வோர்
தப்பாது தண்டனையைத் தருதல் வேண்டும்
தருமமது தானெம்மை இரட்சிப் பாய்நீ

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# “பௌத்த பேரினவாத சி
# இத்தாக்குதல் இலங்கையில் ந

இலங்கை மண்ணில் உயிர்த்த ஞாயிறு அன்று நடந்து முடிந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்களின் யதார்த்தங்கள் குறித்த ஒரு கலந்துரையாடல் பாதுகாவலன் பணிமனையில் இடம்பெற்றது. யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை முதுநிலை விரிவுரையாளர் அருட்தந்தை ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் ஒருங்கிணைப்பாளராக இருந்து இந்தக் கலந்துரையாடல் அமர்வை நெறிப்படுத்தினார். இதில் யாழ் / கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் ஏ. எச். ஜமால் முகிதீன் அவர்களும் புனித. சவேரியார் குருத்துவக்கல்லூரி சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி C.G. ஜெயக்குமார் அடிகளாரும், யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. அகிலன் கதிர்காமர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகள், இந்தக் கலந்துரையாடலின் திசைகளைத் தீர்மானித்துக் கொடுத்தார். அடிப்படை வாதம் என்பது தனது மதம் மட்டுமே சரியென்றும் ஏனைய மதங்கள் தவறென்றும் எண்ணி ஏனைய மதங்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையாகும். இந்த அடிப்படை வாதத்தின் அடுத்தகட்ட நிலை தீவிரவாதம். அதாவது தீவிரமாகத் தன் மத நம்பிக்கையை பின்பற்றும் நிலை. தீவிரவாதத்தின் உச்ச நிலை வெளிப்பாடு அது வன்முறையாக வெடிப்பது. சகல அடிப்படை வாதங்களின் பின்புலம், இந்தத் தாக்குதல்களின் தற்போதைய சமூக வாழ்வியல் அரசியல், பொருளாதாரப் பாதிப்புக்கள் மற்றும் எதிர்காலத்தில் இவை ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் இவற்றிற்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடுமாறு கேட்டுக் கொண்டார்.

**அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்:**

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களும் தொடர்ந்து அது தொடர்பாக வருகின்ற செய்திகளும் எம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக தெளிவுகள் சிலவற்றைப் பாதுகாவலன் வாசகர்களுக்கு வழங்கும் முகமாக இக்கலந்தாய்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இக்கலந்துரையாடலில் எமது கருத்துக்களை சமய அடிப்படை வாதம், இன்றைய நாட்டின் நிலை, எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய சில சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றை மையப்படுத்திப் பகிர்ந்து கொள்வோம். முதலாவதாக சமய அடிப்படை வாதத்தின் எழுச்சி, அதற்கான காரணங்கள் என்பவற்றையும் பகிர்ந்து கொள்வோம்.

**அகிலன் கதிர்காமர்:**

பலவிதமான வரலாற்று ரீதியான சமூகத் தாக்கங்கள் மத்தியில் தான் இந்த அடிப்படைவாதம் தோற்றம் பெறு-கிறது. என்னதான் நவீனமயமாக்கலூடாக மக்கள் உலக வாழ்வியலுக்குள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக சமூகம் சமய வாழ்வியலை விட்டு பின் நகர்ந்து முழுக்க முழுக்க உலகவியலுக்குள் சென்றுள்ளது என்று கூறி விட முடியாது.

அடிப்படைவாதிகளின் தோற்றத்துக்குப் பல காரணங்கள் இருந்தாலும் சமூகத் தாக்கங்களினால் அன்னியப்படுத்தப்படுகின்ற மக்கள் குழுமம் பின்னர் அடிப்படை வாதிகளாக மாறுவதற்கான சாத்தியங்கள் உண்டு.

நீதியான சமத்துவமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பாததும், மக்கள் அந்நியப்பட்டு இத்தகைய தீவிரவாத சக்திகளின் பின் ஈர்க்கப்படவும், இளைஞர்கள் அந்தச் சக்திகளின் கைக்குள் சிக்கிப் போகவும் சாத்தியங்களை உண்டு பண்ணி விடுகிறது.

**அருட்பணி C.G. ஜெயக்குமார்:**

நான் இந்தப் பிரச்சினைக்கு வெறுமனே மத அடிப்படைவாதமே காரணம் என்று பார்க்கவில்லை. ஏற்கனவே உருப்பெற்றிருந்த மத அடிப்படை வாதம் யாரோ சிலரால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. காரணம் இத்தாக்குதலில் இறந்தவர்களில் 62% தமிழ் கத்தோலிக்கர்களே. கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே எமது நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருந்ததில்லை. எதற்காகத் தமிழ் கத்தோலிக்கர்கள் குறிவைக்கப்பட்டார்கள். முதலாவது தெற்கைப் பொறுத்தவரை தமது தாக்குதல்களுக்கு எதிர்த் தாக்குதல் நடத்திக் கலவரம் செய்யக்கூடிய பெரும்பான்மைப் பலம் தமிழ் கத்தோலிக்கர்களுக்கு இல்லை. அங்கு அவர்கள் மிகச்சிறிய அளவிலேயே உள்ளனர்.

இரண்டாவது காரணம் கத்தோலிக்கர்கள் மேற்குலகோடு அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். மேற்குலகு ISIS அமைப்பை சிரியாவிலிருந்து முற்றாக அப்புறப்படுத்தினாலும் எங்களுடைய தாக்குதல்கள் உங்கள் மீது இருந்து கொண்டு தான் இருக்கும் என்ற செய்தியை மேற்குலகுக்குப் பலமாகச் சொல்வதற்காக இத்தாக்குதல்கள் தமிழ் கத்தோலிக்கர்கள் மீது பிரதானமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இத்தாக்குதல்களுக்கு மூன்று சக்திகள் முக்கியமாக உள்ளன. ஒன்று வெளிநாட்டுப் பயங்கரவாதம், இரண்டாவது உள்ளூர் பயங்கரவாதம், மூன்றாவது அரசாங்கம். அரசாங்கம் இதற்குப் பாரிய பொறுப்பு ஏற்க வேண்டும். அரசாங்கத்திற்கு ஏற்கனவே தாக்குதல்கள் குறித்த தகவல்கள் நேரகாலத்தோடு கிடைத்தும் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எல்லாச் சக்திகளும் இணைந்து அடிப்படை வாதிகளைத் தமது திட்டங்களுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதே உண்மை.

அருட்பணி இரவிச்சந்திரன் பாதர் சொன்னது போல மத அடிப்படைவாதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு முக்கியமான விடயம். அதேவேளையில் மத அடிப்படை வாதம் மதங்களிடையே வளர்ச்சி கண்டு வருவதனால்தான் அதனை ஏனைய சக்திகளால் பயன்படுத்த முடிகிறது என்பதும் முக்கியமான விடயம். உலகப் போக்கு அதிகரித்துள்ள நவீனத்துவத்தின் யுகத்திலே ஏன் மத அடிப்படை வாதம் வளர்கிறது? என்பது முக்கியமான ஒரு ஆய்வுக்குரிய விடயம்தான். மதங்களின் அடிப்படைவாதப் போக்கு அம் மதங்களை இத்தகைய சக்திகளின் கருவியாக மாற்றிவிடும். ஆகவே ஒவ்வொரு சமயமும் தனது மதத்திலுள்ள அடிப்படை வாதச் சிந்தனைகளைக் களைய முயல்வது அவசியமானது என்பது எனது கருத்து.

**ஜமால் முகிதீன்:**

முஸ்லீம்கள் எப்போதும் மத அடிப்படை வாதத்துக்கு எதிரானவர்கள். நாங்கள் எப்போதும் மத அடிப்படை வாதிகளை ஒழிப்பதற்கே முயற்சிப்போம். நாங்கள் எப்போதும் சாந்தி, சமாதானத்தோடு வாழ நினைப்பவர்கள். மத அடிப்படை வாதிகளை இனம்கண்டு அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

ஆனால் அவற்றை எவரும் கணக்கிலெடுக்கவில்லை. நாங்கள் மத வாதிகளிடமிருந்து எப்போதும் வேறுபட்டவர்கள் என்பதில் தெளிவாக இருக்கிறோம். எந்த அடிப்படை வாதிகளையும், தீவிரவாதிகளையும் காட்டிக்கொடுக்க வேண்டும் என்று எங்களுடைய மேற்சபை எங்களுக்குப் பணித்துள்ளது. ISIS தீவிரவாதிகளின் துணையோடு இலங்கை அடிப்படைவாதிகள் தமது திட்டங்களை இலகுவாக நகர்த்தியுள்ளனர்.

உண்மையில் ஏன் இந்த அடிப்படைவாதிகள் உருவாகுகிறார்கள் என்ற காரணத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு மன உழைச்சலே அவர்களை இத்தகைய வழிகளில் செல்லத்தூண்டுகிறது. எனவே நாம் அவற்றுக்கான சரியான காரணங்களைக் கண்டறிந்து அந்தத் தாக்கங்களை சரிசெய்ய முயல வேண்டும்.

**அகிலன் கதிர்காமர்:**

அடிப்படைவாதம் என்பது மற்ற மதங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பது தான் பிரச்சினையாக வருகிறது. நான் மட்டும் சரியெனக் கருதி மற்றவரை ஏற்றுக் கொள்ள மறுப்பதுதான் பிரச்சினை. இந்த மாதிரியான சிந்தனை மதங்களில் மட்டுமல்ல தேசியவாதத்திலும் உருவா-கலாம். அது தமிழ் தேசியவாதமாக இருக்கலாம் அல்லது சிங்கள தேசியவாதமாக இருக்கலாம். ஆகவே அடிப்படைவாதம், கருத்தில் பல்வேறு நாமங்களில் உருவாகி இத்தகைய பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

**அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்:**

அருட்பணி ஜெயக்குமார் இந்த இடத்தில் சில அடிப்படைக் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவது நல்லது என்று நினைக்கிறார். தீவிரவாதம் (Extremism) அடிப்படை வாதம் (Fundamentalism) பயங்கரவாதம் (Terrorism) சமூகத்தில் நாங்கள் தீவிரப் போக்குக் கொண்ட மனிதர்களைப் பார்க்கிறோம். எதில் ஈடுபட்டாலும் அவர்கள் அவ் விடயத்தில் தீவிரமாக இறங்கிவிடுவார்கள். இத்தகையோரில் நெகிழ்வுத்தன்மை காணப்பட்டது. சமூகத்தில் பெரும்பாலானவர்கள் நெகிழ்வுப்போக்கு உடையவர்களாகவே காணப்படுகிறார்கள். இவர்கள் விட்டுக் கொடுத்து, ஏற்றுக்கொண்டு, சமாளித்து வாழும் விதமாக சமூகமயமானவர்கள். இத்தீவிரப்போக்குக் கொண்டோர் சமய செயற்பாடுகளில் ஈடுபடும்போது அங்கும் அவர்கள் தீவிரமாக இருப்பார்கள். குறிப்பிட்ட சில சமய நம்பிக்கையின் அடிப்படையில் இந்தத் தீவிரப்போக்கு உருத்திரட்சி பெறுகின்ற போது சமய அடிப்படைவாதம் தோன்றுகிறது. இது சமூகத்தில் சமயங்களின் சுகவாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமையுமாயினும் இந்நிலையிலும் தீவிரவாதம் அடிப்படையாக பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதில்லை. ஆனால் இப்போக்கு வன்முறையாக வெளிப்படும் கட்டத்தை அடையும் போது அது பயங்கரவாதமாக உருமாற்றம் பெறுகிறது. தீவிரவாத அடிப்படைவாதப் போக்குகளில் உள்ள ஒரு பேராபத்து அவை உணர்வு பூர்வமாகக் காணப்படுவதால் இவை இலகுவாகக் கையாளப்படும் தரப்பாக மாறிவருகின்றன. ஆகவே வேறு சக்திகள் தமது நோக்கங்களை அடைவதற்கு இச்சத்திகளைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தை உருவாக்குகின்றன. இந்நிலையில்தான் மனைவி, பிள்ளைகள் எவரையும் துச்சமாகத் தூக்கியெறிந்துவிட்டு அவர்களால் தற்கொலைக் குண்டுகளாக மாற முடிகிறது.

தொடர்ந்து எங்கள் கலந்துரையாடலை பின்வரும் விடயங்களில் மையப்படுத்துவோம். இவ்வகைச் சமுதாயம் இன்று எத்தகைய பாதிப்புக்களுக்குள்ளாகி இருக்கிறது. பௌத்த சிங்களப் பேரினவாதத்தில் மாற்றம் சாத்தியமா? சமய, சமூக தலைவர்களின் தற்போதைய கடப்பாடுகள் எவை? இப்படியாக வினாக்களை மையப்படுத்திக் கலந்துரையாடலைத் தொடருவோம்.

**அருட்பணி C.G. ஜெயக்குமார்:**

பௌத்த பேரினவாதம் என்பது நிறையப் பங்களிப்பைச் செய்துள்ளது. LTTE இருக்கின்ற பொழுது சிங்களக் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மை வாதிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல் முஸ்லீம் மக்களையும் பாவித்து தமிழ் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்ப இந்த இரு சக்திகளும் அவர்களுக்குத்தேவையில்லை. இரு சக்திகளையும் வெளியேற்றும் தேவை இருக்கிறது. அதை வெளிப்படுத்துவதன் அடையாளமாகவே நான் நினைக்கிறேன் மாவனலவில் நிகழ்ந்த சம்பவம் பொதுபலசேன உருவாக்கம் என்பன முக்கிய காரணமாக இருக்கலாம். அதுமட்டுமல்ல சிங்களக் கத்தோலிக்கர்களை அழிக்க இந்த மாதிரியான நிகழ்வைத் தூண்டிவிட்டு மௌனமாக இருந்ததன் ஊடாகத் தமது நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் அது பின்விளைவுகளைக் கூட்டிக் கொண்டு செல்கிறது. எப்படியென்றால் வெளிநாட்டு சக்திகள் இலங்கையினுள் கூடுதலாக ஊடுருவத்தொடங்கி விட்டார்கள் என்பதை நம் அரசாங்கம் உணருதோ தெரியாது. இலங்கையை இன்று ஆழ்வது வெளிநாட்டு சக்தியே தவிர, உள்ளூர் சக்திகள் அல்ல. அதுமட்டுமல்ல பல தகவல்கள் வெளியாகியது முந்திய அரசாங்கம் இருக்கும் போது பொதுபல சேன அமைப்புக்கும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்கும் பாதுகாப்பு அமைச்சினால் பணம்கொடுக்கப்பட்டது இப்போது வெளியாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த இயக்கத்தை வளர்க்க அரசாங்க மும்பங்களிப்புச்செய்தது. முக்கியமாக சிங்களப் பேரினவாதம் அடிக்கல்லாக இருக்கிறது. 1955ம் ஆண்டு N.M.பெரேராவின் வாக்கியம் “தமிழ், முஸ்லீம் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் வெளிநாட்டு சக்திகளின் ஊடுருவலைத் தடுக்க முடியாது” என அப்பவே கூறினார். அதைப் பெரிதாக நாம் எடுக்கவில்லை. தற்போது அதுவே யதார்த்தமாக இருப்பதை நாம் காண்கின்றோம். என்ன செய்யலாம் என்று நான் நினைக்கின்றேன் என்றால்:

1) ஒவ்வொரு மதமும் தமக்குள் சுய ஆய்வு செய்தல் வேண்டும் (Self-Evaluation). அதாவது என்னுடைய மதத்தில் தீவிரவாதப் போக்கு இருக்கிறதா? தீவிரவாதப் போக்கிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா? என்னுடைய மதத்தில் என்ன நடக்குது என்று எனக்குத் தெரியும் அப்படி உங்களுடைய மதத்தில் நடப்பதும் உங்களுக்குத் தெரியும்.

தீவிரவாதம் எங்கு ஊட்டப்படது என இனம் கண்டு (Self - Purification) சுய தூயப்படுத்தல் கட்டாயம் தேவை.

2) மதங்களிடையே உரையாடல், சந்திப்பு மற்றைய மதங்கள் நடாத்துகின்ற விழாக்கள் உதாரணமாக தீபாவளி, கிறிஸ்மஸ், கஜ் போன்றவற்றிற்கு நாமும் சென்று கைகோர்த்து எமது மத ஒற்றுமையை, மத இணக்கத்தைக் காப்பது மிகமிக முக்கியம் என்பதை நான் முன்வைக்கிறேன். இப்போது தேவை எனவும் கருதுகிறேன்.

**ஜமால் முகிதீன்:**

தீவிரவாதம் வளர்வதற்குக் காரணம் ஏதோ ஒன்றில் நாம் பலவீனமாக இருக்கப் போய்தான் அவர்கள் வளர்கிறார்கள். அப்படி இருக்கும்போது மத ஒற்றுமை புரிந்துணர்வு இருந்தால் இப்படியான தீவிரவாதத்தை இல்லாது ஒழிக்கலாம்.

வருங்காலத்தில் தீவிரவாதத்தை நிற்



# சிந்தனையும் போக்குமே
# ல் நடைபெறக் காரணமாயிற்று”

ாத நிலை
லை தீவிர
பின்பற்றும்
வன்முறை
பின்புலம்,
யல் அரசி
காலத்தில்
ான தீர்வு
ார்.

பாட்ட வேண்டும் என்று சொன்னால் யாழ்ப்பாணத்தில் எங்கட பக்கம் உள்ள பள்ளிவாசல்களை ஒழுங்குபடுத்தி மற்ற சமயத்துடன் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் செய்வேன். மற்றது நீங்களும் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் நாங்கள் எப்படி ஒற்றுமையோடு புரிந்துணர்வோடு இருக்கிறம் என்றதை எடுத்துக்காட்ட வேண்டும்.

வெள்ளிக்கிழமை யமியத்துல் தொழுகையைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அவர்கள் பத்வாம் முறையை சொன்னார்கள். பத்வாம் தீர்ப்புமுறை 'இதில் பார்க்க இதை செய்யுங்கள்' என்று சொல்வார்கள். நீர்கொழும்பில் சில பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பம் தமது வீடுகளை விட்டு வெளியேறிவிட்டார்கள். வெல்கந்தை என்ற இடத்தில் முஸ்லீம்கள் இல்லை. எல்லோரும் வெளியேறி விட்டார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவுமில்லை.

ஒராளை ஒராள் பார்க்கும் போது முஸ்லீம் சிங்களம், தமிழ் பார்க்கும் போது பயத்தோடு பார்க்கக்கூடாது. என்னைப் பொறுத்தவரை அப்படியானவற்றுக்கு நாம் ஒன்றாகச் சேர்ந்து உழைக்க வேண்டும். எங்கட சிறுபராயத்தில் அப்படி நாம் இருந்திருக்கிறம், பார்த்திருக்கிறம் ஆனால் அப்ப உள்ள சமூகம் போல் இப்ப யாழ்ப்பாணத்தில் இல்லை என்று தான் என் மனதுக்குப் படுவதை உணர்கிறேன்.

நான் படித்த தமிழ் பாடசாலை நண்பர்கள் எல்லாம் அப்படி. எங்கட பிள்ளைகள் படிச்ச சென். ஜோண் கல்லூரியில் எனது மச்சான் மகன் மாணவத் தலைவனாக இருந்தார். அப்படி ஒற்றுமையாய் இருந்த சமூகத்தில் இப்ப ஒரு பிளவு வரும என்று தெரியல. எல்லாருடனும் பழகி ஒற்றுமை புரிந்துணர்வு எங்கள் பக்கத்திலும் வெளிப்படனும். முந்தி ஒரு காலத்தில் முஸ்லிம் பள்ளிவாசல் போகக் கூடாது என்று பிற மதத்தினர்இருந்தனர். ஆனால் இப்ப அதெல்லாம் இல்ல. எல்லா இடமும் போகலாம் என்று வந்திற்று.

**அருட்பணி C.G. ஜெயக்குமார்:**

உலக அரசியலில் மாற்றம் ஏற்பட்ட பின்னர் தாக்குதலால் இலங்கையிலும் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக முஸ்லீம் சகோதரர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் பெரும்பான்மையான சிங்கள பேரினவாதத்தால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்ப அவர்கள் ஒற்றுமையாக இருந்த ஒரே ஒரு சமூகம் கத்தோலிக்கர்கள். இப்ப கத்தேலிக்கர்களுடனும் பிரச்சினை. ஆனாலும் ஒரு சிலர் செய்த காரியங்களால் முஸ்லீம் சமூகம் இன்றைக்கு ஒரு பாரிய தாக்குதல்களை (Sandwich) பல பின் விளைவுகளை எதிர்கொண்டிருக்கிறது. இப்படியான வேளையில் இளைஞர்கள் பாதிக்கப்பட்டு விரக்தியடையும் இளைஞர்கள் தீவிரவாத நடவடிக்கைக்குப் போகக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இந்த விடயத்தை அரசாங்கமும் சரி பாதுகாப்புத்துறையும் சரி மிகவும் கவனமாகக் கையாள வேண்டியதேவை உண்டு. இல்லையெனில் எமக்கு என்ன பாதுகாப்புப் படையால் நடந்ததோ அதுபோல பாரிய பின் விளைவுகள், பிரச்சினைகள் ஏற்படும்.

**அகிலன் கதிர்காமர்:**

பயங்கரவாதத் தோற்றத்தில் தனிநபர் தாக்கமும் உண்டு. அதேவேளை சில கருத்தியலும் (ideologies) உண்டு. இது ஒரு குறுந்தேசியவாதமாக இருக்கலாம் அல்லது ஒரு மத அடிப்படைவாதமாகவும் இருக்கலாம். இவை ஒரு எதிரியை (Enemy) உருவாக்கி தாம் வாழ்வதால் உண்மையாக எதிர் சக்திகள் இருவரும் நண்பர்கள். ஒரு Extreme இருந்தா தான் அதாவது பொதுபலசேன மாதிரியான ஒரு Extreme Force ற்கு ஒரு Force இருந்தாத் தான் தம்மைத் தக்க வைக்க முடியும். கருத்தியல் ரீதியாகத் தம்மை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அருட்தந்தை கூறியதுபோல சுய விமர்சனம் செய்யாமல் அவர்களை மாற்ற முடியாது. இப்ப ஒரு மதத்திற்குள்ள இனத்திற்குள்ள இப்படி ஒரு போக்கு இருந்தால் நாங்கள் தமிழராக அதை Challenge பண்ணலாம். ஒரு அரசு என்று பார்க்கும் போது உடனடியாக இராணுவ ரீதியாகவோ சட்டரீதியாகவோ யோசிப்பார்கள். ஒரு கருத்தியல் ரீதியான பிரச்சினையை சமூக அரசியல் ரீதியாகவே கையாள வேண்டும். ஒரு பயங்கர நடவடிக்கை நடக்கும் போது இராணுவ ரீதியிலான புலனாய்வு செய்யும்போது வேறு பிரச்சினை உருவாகலாம். முஸ்லீம் இப்ப ஒரு இறுக்கப்பட்ட நிலையில் தான் (Sandwich) இருக்கின்றனர். தனிமையாக்கப் பட்டவர்களாக இருக்கின்றனர்.

**ஜமால் முகிதீன்:**

எங்கள் பிள்ளைகளுக்கு உதாரணத்திற்கு Super Market போனா எது சாப்பிடலாம் எது சாப்பிடக்கூடாது என்று 5,6 வயதிலேயே தெரியுது. மற்றது எந்தச் சந்தர்ப்பத்திலேயும் எம்மதம் One side இல் போக சொல்லேல. என்னைக் கூட சில பேர் கூப்பிட்டு போராட்டத்தில் ஈடுபடச் சொன்னால் சொல்றது மட்டும் தான் செய்யிறது.

LTTE 1990 ம் ஆண்டு எங்களைக் கலைத்து விட்டார்கள். பெரிய ஒரு பிரச்சினை தானே இது. 200 ரூபாயோட போய் இப்ப அங்க இருந்து யாழ்ப்பாணம் வரமாட்டேன் என்று சொல்றாங்க. அப்படி நாங்கள் கீழ்த்தரமாகப்போயும் தமிழ் மக்களுக்கு ஒரு அநியாயம் செய்ததா சொல்லுவிங்களா நீங்கள்? எவ்வளவோ கஷ்டம் துன்பம் அனுபவித்து எவ்வளவோ இழந்தும் அந்நேரம்

## சகவாழ்விற்கான கருத்துரையாடல்

கூட **யமில் சுலைமானின்** சொல்லைத் தான் பின்பற்றினோம். அமைதியையும் சாந்தியையும் தான் நாங்க விரும்புறம்.

யாழ்ப்பாணத்தை ஓர் எடுத்துக் காட்டாக எண்ணலாம் எனத்தோன்றுகின்றது. தமிழ் மக்களுடன் எங்களுக்கு நல்ல புரிந்துணர்வு இங்கு இருக்கு. சில ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகப் பல செய்திகளையும் தவறான எண்ணக் கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றது. இந்த வன்முறை எமக்கு எதுக்கு. ஒவ்வொருவரது வாழ்வும் குறைந்த காலம் தான். எங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையையும் பார்க்கணும். யாழ்ப்பாணத்தை மாத்தணும் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்கணும்.

**அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்:**

நடந்த சூழலில் இரு விடயம் சாதகமாக நடந்திருக்கின்றது.

1. இஸ்லாம் ச்கோதரர்கள் குறிப்பாக தலைவர்கள் குற்றவாளிகளை அடையாளப்படுத்த பெரிய உதவி செய்திருக்கிறார்கள். அது ஒரு மரியாதைக்குரியது.

2. அதேமாதிரி கிறிஸ்தவர்களும் மதக்கலவரம், வன்செயல் எதற்கும் போகாமல் இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

அது சமூகத்தின் ஒரு பலம் என்று தான் நான் பார்க்கிறேன். கலவரம் நடந்திருந்தால் அதனைக் கட்டுப்படுத்துவதே பெரிய வேலையாகி இருந்திருக்கும். மேலும் ஒவ்வொரு சமயமும் எப்படித் தங்களது சமயத்துக்குள் இந்த அடிப்படைவாத, தீவிரவாதச் சிந்தனைகள் உருவாகிறது என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, அக்கறை கொண்டு அவற்றை நியாயமாக்க வேண்டும்.

முதலில் இளைஞர்களுக்குள் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று நான் யோசிக்கிறேன். கிறிஸ்தவ உருவாக்கல் குழுமங்கள், இளையோர் குழுமங்கள் இருக்கிறது. அவர்களுக்கிடையயான சந்திப்புக்கள், நண்பர்கள் ஒன்றுகூடல்களை அதிகம் உருவாக்கக் கூடிய நட்பு ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். பெரும்பாலும் அது நடப்பதில்லை. ஒரு சமூகத்தில் அல்லது வீதிகளில் இருந்து நட்பு வந்தாசரி. மற்றும் படி ஒன்றாகப் படித்தாலும் சரி, சேர்ந்துபழகும் சந்தர்ப்பங்கள் குறைவு தானே. எதிர்காலத்தில் வேலைத்திட்டம் ஒன்றைப் பற்றி யோசிக்கலாம். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ இளைஞர்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் ஒருங்கிணைந்த செயற்பாடு சிலவற்றை நடைமுறைப்படுத்துவது நல்ல ஒரு செயற்பாடாக இருக்கும் என நினைக்கிறேன்.

**ஜமால் முகிதீன்:**

என்னைப்பொறுத்தமட்டில்பள்ளிவாசல் ரீதியாக இனிமேல் எந்த அசம்பாவிதமும் நடக்கக்கூடாது என்பதில் நாம் அவதானமாக இருக்கிறோம். எங்களுக்கு நாங்கள் ஒவ்வொரு பள்ளி வாசலுக்கும் ஒவ்வொரு பகுதியும் பொறுப்பாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் எட்டுப் பள்ளிவாசலுக்கும் எட்டுப் பிரிவு இருக்கின்றது. அதனை மையமாக வைத்து நாங்கள் அவ்வப் பள்ளி மக்கள் அவர்களுடைய பகுதியை அவதானித்து வருகின்றனர். அந்த வீட்டில் இருக்கிற ஆக்கள், படிக்க வந்திருக்கிற ஆக்கள், வந்து 2 நாள் 3 நாள் தங்கிவிட்டுப் போகிறவர்கள் வந்தாலும் பள்ளிவாசலுக்கு வந்து சொல்லணும். அவர்களைப் பதிய வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை தயார்பண்ணி இருக்கிறோம். நாங்களே அச்சிட்டு அவற்றை எல்லாப் பள்ளிவாசலுக்கும் கொடுத்துள்ளோம்.

வெளியூரிலிருந்து வியாபாரம் செய்ய வருகின்றவர்களும் படிக்க வந்தவர்களும் சுற்றுலா நோக்கில் வந்தவர்களும் தங்கள் தகவல்களை பள்ளிக்கு கண்டிப்பாக கொடுக்க வேண்டும். வருங்காலத்தில இப்படியான சம்பவங்கள் நடக்கக்கூடாது என்றதில் நாங்கள் கவனமாக இருக்கிறம்.

**அருட்பணி C.G. ஜெயக்குமார்:**

உடனடியாக ஒருசில நடவடிக்கைகளை வரவேற்கத்தக்கதாக உள்ளது. ஆனால் நான் நினைக்கிறேன் முதல் சொன்னது போல் கருத்தியல் ரீதியான சில கட்டாயத் தேவை இருக்கிறது. முதலாவது மத மேலாண்மை. என்னுடைய மதம் தான் பெரிது. மற்ற மதங்கள் சாத்தான் மதங்கள். மற்ற மதத்தில் தீயது இருக்கிறது போன்ற மத மேலாண்மை இன்று மேலோங்கி உள்ளது.

ஒவ்வொரு மதத்திலும் இருக்கிற ஆக்களும் சுய ஆய்வு செய்து தங்களுடைய நம்பிக்கையால் மதங்களைப் பின்பற்றுபவர்களுக்குக் கொடுக்கணும். மத மேலாண்மையைக் கட்டாயம் ஒவ்வொரு மதத்திலும் இருந்து அப்புறப்படுத்தணும். அது ஒரு முக்கியமான கருத்தியல் ரீதியான மாற்றத்திற்கு மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

இரண்டாவது விடயம் மேற்குலகையும், கத்தோலிக்கத்தையும் கிறிஸ்தவர்களையும் அடையாளப்படுத்தும் தவறான சிந்தனையை நாம் அப்புறப்படுத்த வேண்டும். அது தான் இன்று அப்பாவி மக்களைக் கொல்வதற்கு உதவியாயிருக்கு. மேற்குலகு இன்று கிறிஸ்தவத்தை விட்டுப் போகும் நிலை (Secularization) உருவாகியுள்ளது. அவனுக்கு இது பாதிக்காது.

உதாரணமாக நியூசிலாந்தில் நடந்த சம்பவம் நியூசிலாந்தில் பரட் என்பவன் சுட்டான். அவன் ஒரு கத்தோலிக்கன். ஆனால் பின்பற்றிய கொள்கை White Suprimacy அதாவது வெள்ளை மேலாண்மையை மனதில் கொண்டானே தவிர, அவனுக்கும் கத்தோலிக்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை. அதனால் தான் இங்கு பழி வாங்கப்பட்டார் என அரசில்வாதிகள் சொல்வதில் அர்த்தமில்லை. இது ஒரு கண் துடைப்பும் ஏமாத்து வேலையும். அது உண்மை இல்லை அப்படி நடக்கவுமில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், கத்தோலிக்கர்கள் அல்லது கிறிஸ்தவர்களை மேற்குலகோடு அடையாளப்படுத்துகின்ற கருத்தியல் சிந்தனையிலிருந்து நாம் மாற்றங்களை படிப்படியாக உருவாக்க வேண்டும்.


அதேபோல் இஸ்லாம் என்பது பயங்கரவாதம் என்ற கருத்தை நாம் மாற்ற வேண்டும். உதாரணமாக சல்மான், கசிம் போன்ற ஒரு சிலர் இருக்கிறார்கள். அதுக்காக இஸ்லாம் முழுவதையும் பயங்கரவாதிகள் எனக் கொள்ளும் கருத்தை மாற்றனும். இப்டியான அடிப்படைக் கருத்தியல் மாற்றத்தைக் கொண்டு வருவது இன்றைய காலத்தின் தேவையாக நான் கருதுகிறேன்.

**ஜமால் முகிதீன்:**

எல்லோரும் தம் சமயத்தைப் பின்பற்ற வேண்டும். மற்றச் சமயத்தினை வெறுப்பதை இல்லாது ஒழிக்க வேண்டும்.

**அகிலன் கதிர்காமர்:**

முக்கியமாக யாழ்ப்பாணத்தில பல் சமயங்களுக்கிடையில் நல்ல புரிந்துணர்வும், உறவுநிலையும் இருக்கிறது. யுத்தத்திற்குள் பாதிக்கப்பட்டு வந்து கிறிஸ்தவ, முஸ்லிம், இந்து மக்கள் இவ்வாறு ஒன்று சேர்ந்து ஒருங்கிணைப்பைக் காட்டக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை நாங்கள் கண்கூடாகக் பார்க்கின்றோம். இதை மேலும் வளர்க்கவேண்டிய கடமைப்பாட்டில் நாம் எல்லோரும் இன்றுள்ளோம். சிறப்பாக இளைஞர்கள் மத்தியில் இவ் உணர்வை வளர்த்து, சகவாழ்வை மதங்களுக்கு இடையே வலுப்படுத்தக்கூடிய செயற்பாடுகளை அறிமுகம் செய்து செயற்படுத்த முன்வருவோம்.



# இருளில் தோய்ந்த உயிர்ப்பு விழா






## பாகுபாட்டில் ஒற்றுமை வராது - வரமுடியாது

**கரவையூர் செல்வம்**

இச் சித்திரை 21 ம் நாள் ஒளியாக இருக்க வேண்டிய நாள் இருளாக மாறியது. காரணமென்ன? அன்றைய தினம் கிறிஸ்தவ மதத்தின் மிக முக்கிய விழாவாகிய உயிர்ப்பு விழா மகிழ்வோடு கொண்டாடும் நாள். பல்வேறு வகையில் சிறைப்பட்டோரை சிறப்பாக அகத்தே சிறைப்பட்டோரை விடுதலை செய்ய இயேசு தன்னுயிரை அர்ப்பணம் செய்த திருநாள். இந்தநாளில் திருவழிபாட்டில் பங்குகொள்ளச் சென்ற கத்தோலிக்க மக்களை அரக்கர்களாக மாறியவர்கள் கொலை செய்தார்கள். 1977ம் ஆண்டு கலவரத்தின் பொழுது, கொழும்புப் பேராயர் ஓர் உரை ஆற்றினார்: "ஒரு மிருகக் கூட்டம் திட்டமிட்டு இன்னொரு மிருகக் கூட்டத்தைக் கொன்றதாக வரலாறு இல்லை" மும் மொழிகளிலும் அவரது உரை ஈழத்து அன்றைய வானொலி யில் ஒலிபரப்பப்பட்டது. அதன் பின்னர் ஈழத்து இனப்பிரச்சினை பற்றி ஆயர் அவர்கள் வாய்திறக்கவே இல்லை. திறக்க அவரது மறைமாவட்டக் குருக்கள் சிலர் விடவில்லை.

### இஸ்லாமிய மக்களே!

இந்நாட்டு வரலாற்றில், கத்தோலிக்க மக்கள் உங்களுக்கு என்ன செய்தார்கள்? உங்களைக் கொடுமைப் படுத்தினார்களா? உங்களுக்குத் தீமை செய்தார்களா? யாழில் புலிகள் உங்களை விரட்டியபோது உங்களை வெளியேற்ற வேண்டாமென்று சில கத்தோலிக்க குருக்கள் குரல் எழுப்பியதை மறந்து விட்டீர்களா? போகட்டும் எதிரிகளையும் மன்னிக்கச் சொன்னார். இயேசு கல்வாரியில் சித்திரைவதை செய்து சிலுவையில் அறைந்து கொண்டிருந்தவர்களை அந்த நேரமே அவர் அவர்களை மன்னித்தார். அவர் ஒரு மாமனிதன். அவரது அன்பின் வரிகள் அவரைக் கொல்லவில்லை.

கத்தோலிக்க மக்களைக் குறிவைத்த நீங்கள் கொன்று குவித்தது ஒரு கேவலமான செயல் ஏன் இவ்வண்ணம் செய்தீர்கள் என்று இன்னமும் (இதை எழுதும் வரை புரியவில்லை).நியூசிலாந்தில் கிறைஸ்ற் சேர்ச் (Christ Church) பகுதியில் உள்ள ஒரு பள்ளிவாசலில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஒரு வெள்ளையன் வழிபாட்டில் ஈடுபட்ட முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தான். அதற்கு பழிவாங்கவே, இந்நாட்டுக் கத்தோலிக்க மக்களைக் குறிவைத்து இக் கொலைகள் நடைபெற்றன. என்று ஓர் அமைச்சர் ஆதாரம் ஏதும் இன்றி அறிக்கை விடுத்துள்ளார்.

இக்கூற்றை நியூசிலாந்தின் பிதரமர் ஏற்றுக்கொள்ளவில்லை காரணம் அதற்குரிய காரணமேதும் இதுவரை அவர்களுக்குக் தெரியாது என்று சொல்லியுள்ளார். மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ் சிலவருடங்களாகவே ஈழத்தில் இருந்திருக்கிறார்கள். இஸ்லாமிய அடிப்படை வாதத்தை பகிரங்கமாகவே வளர்த்துள்ளார்கள். என்று ஊடகங்கள் உறுதிப் படுத்தியுள்ளன. யாரைப் பலிக்கடாவாக்கலாம்?

அவசரமாகக் கூடிய அனைத்து அரசியல் கட்சிக்கூட்டமொன்று மைத்திரியின் தலைமையில் இரு மணித்தியாலங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தக் கூட்டத்தில் யாரைப் பலிக்கடாவாக்கலாமென்று தான் இந்தக் கையாலாகாத அரசியல் வாதிகளின் வாதமாக அமைந்தது. அந்த நாட்டுக்கே ஒரு வெட்கக் கேடான செயல்.

நாட்டில் நடைபெற்ற இந்தக் கொடூரச் செயலை வைத்து எரியும் வீட்டில் சுருட்டுப் பற்ற வைக்க முனைகிறார்கள். இந்த நாட்டு அரசியல் வாதிகள். இதுவொன்றும் புதிதல்ல. இவர்களுக்கு உண்மையான நாட்டுப்பற்றுக் கிடையாது. தங்கள் பதவிகளை எங்ஙனம் தக்கவைக்கலாம் அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு இந்தப் பிரச்சினையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது தான் சுயநலம் நிறைந்த இந்த நாட்டு அரசியல் வாதிகள் இவர்களுக்குத் "தலைவராக இருப்பவர் தான் தலைமைத்துவப் பண்புகள் எதுவுமே இல்லாத மைத்திரி.

### அன்று

கண்டி நகரை ஒட்டிய திகனப் பகுதியில் முஸ்லீம் மக்களின் வீடுகளும் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்ட பொழுதும் அவர்கள் கொலையுண்ட பொழுதும் இந்த நாட்டு அரசியல் வாதிகளும் மதப் பீடாதிபதிகளும் என்ன செய்தார்கள்? கொழும்பு நகரில் Fashion Buy கடையொன்று எரிக்கப்பட்ட பொழுது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? இந்த இரு நிகழ்வுகளிலும் பௌத்த குருக்கள் ஈடுபட்டமை நாடறிந்த உண்மை வேறு சில பள்ளிவாசல்களும் பாதிக்கப்பட்டன அண்மைக்காலத்தில்.

முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக் கான தமிழர் படுகொலை செய்யப்பட்ட பொழுது. ஆலயங்களில் தஞ்சமடைந்த பொழுது ஆலயத்தோடு மக்கள் அழிக்கப்பட்ட பொழுது. மருத்துவமனைகளே அரச அரக்கர்களால் தாக்கப்பட்டபொழுது அன்றிருந்த அரசியல் வாதிகள் என்ன செய்தார்கள்? மதத் தலைவர்கள் என்னதான் செய்தார்கள்? அம்மக்களைச் சென்று பார்வையிட்டார்களா? ஊடகங்களை மாதக்கணக்காக அப்பக்கம் செல்ல தடைவிதிக்கப்பட்டதே.

இந்த நாடு "சுதந்திரம்" (எல்லோருக்கும் அல்ல) பெற்ற நாள் தொட்டு இன்று வரை சிறுபான்மையினரை பௌத்த சிங்கள அடிப்படை வாதம் அடக்கி ஆட்சி செய்ததினால்தான் அன்று புலிகள் தோன்றினார்கள். இன்று ஐ. எஸ்.ஐ.எஸ் தோன்றியுள்ளது. அரசியல்வாதிகளின் தவறுகளினால் தான் அப்பாவிமக்கள் பலியானார்கள்.

இனப்பாகுபாடு இருக்குமட்டும் இந்த நாட்டில் ஒற்றுமை வராது. ஒற்றுமை வளர அரசியல் வாதிகள் இடமளிக்க மாட்டார்கள். போர் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டுமென்று ஜெனிவாவில் பல வருடங்களாக எடுத்துரைக்கப்பட்டது. இன்று வரை (10 ஆண்டுகள்) எந்த விசாரணையாவது நடைபெற்றதா? மேல் நாட்டு நீதிபதிகளுடன் இணைந்த ஒரு விசாரணையே தமிழ்த் தரப்பு மீண்டும் மீண்டும் கேட்டது.

"இது உள்நாட்டு விடயம் மேல் நாட்டவரின் தலையீடு தேவையில்லை. நாங்களே விசாரணை நடத்துவோம்" என்று கொக்கரித்தீர்களே. அனைத்துக்கட்சி அரசி யல் வாதிகளும் இன்று வரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. இன்று ஐ.எஸ்.ஐ.எஸ் அண்மையில் நடத்திய கொடூரங்களுக்கு தாங்களே பொறுப்பென்று தைரியத்துடன் சொன்னதும், உடனேயே "வட அமெரிக்காவின் FBI வா, இந்தியாவின் RAW வா, எல்லா நாடுகளும் வாருங்கள்" என்று கதறுகிறீர்களே! பாகுபாடுகள் இருக்கு மட்டும் ஒற்றுமை வராது. ஒற்றுமைக்குத் தடையாக இருப்பது இனவாதம் பௌத்த அடிப்படை வாதமே.

இஸ்லாமிய அடிப்படை வாதத்தை அழிக்க வேண்டுமென்று வயிறுகிழியக் கத்துகிறீர்கள். நாமும் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் பௌத்த அடிப்படைவாதம் இந்த நாட்டில் தாண்டவமாடுகின்றதே! அதை அழிப்பார்களா? இன வேறுபாடுகளை வளர்க்கு மட்டும், இந்த நாட்டில் ஒற்றுமை வராது."ஒரு மதம், ஒரு மொழி, ஒரு கொடி" என்ற பௌத்த அடிப்படை வாதம் இருக்கு மட்டும் இந்த நாட்டிலே ஒற்றுமை வராது.

### அழைப்பு

அண்மையில் கத்தோலிக்க மதத் தலைவர் போப்பிரான்சிஸ் றுகண்டாவின் அரசியல் தலைவர்களின் கால்களில் விழுந்து 'சண்டையை நிறுத்துங்கள் பாகுபாட்டை வளர்க்காதீர் கள் சமாதானத்தை நாடுங்கள்' என்று கேட்டதை உலகமே பார்த்து வியந்து பாராட்டியது.



நான் ஒரு சாதாரணமானவன். இருப்பினும் உங்கள் - அதாவது இந்த நாட்டு அஸ்கிரிய மல்வத்த பௌத்த மடாதிபதிகளையும் கொழும்புப் பெரிய குருவையும், மைத்திரி, ராஜபக்சாக்களையும், ரணிலையும் ஒன்று கூட்டி உங்கள் கால்களில் விழுந்து கேட்கின்றேன்.

"அனைத்து அடிப்படை வாதங்களையும் இன்றே அழியுங்கள். இனிவரும் தேர்தல்களில் இனத்துவேஷம் பேசுவோரை இன மத வேறுபாட்டை வளர்ப்பவர்களை உடனேயே நீதிமன்றத்திற்கு அழைத்து அவர்களை சிறைக்கு அனுப்புங்கள் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்று அடித்துக்கூறி அனைவரையும் சமத்துவமாக நடத்துங்கள் 21ம் திகதி கொல்லப்பட்ட அனைத்து மக்களின் சார்பாகக் கேட்கின்றேன். இந்த நாடு இரத்தத்தில் தோய்ந்துள்ளது. அதற்கு நீங்கள் தான் முக்கிய காரணம் அந்த இரத்தத்தை இனியாவது கழுவுங்கள்.

Here is no unity in dualism எந்த விதமான பாகுபாட்டிலும் ஒற்றுமை வராது. வர முடியாது இது இன்றைய மெய்யியல் உண்மை: இறையியல் உண்மை, உளவள உண்மை, ஆன்மீக உண்மை.

இருளில் வாழும் அரசியல் - மத முகாமையாளர்கள் ஒளிக்கு வாருங்கள். ஒளியில் தான் உண்மைகள் தோன்றும். கருணையில் தான் நீதி நிலைநாட்டப்படும்.

Justice arises out if compassi on (Meissen Eckhart)

## பலியில் பலிப்பொருளானீரோ?

பாருலகின் பேரொளியாம் கிறிஸ்து
பாரினை மீட்ட பாஸ்கா பலியில்
பங்காளிகளாகிடவே பகலவன் வேளையில்
பரமன் பதம் பக்தியுடன் பணிந்திருந்தீர்

பாடுகள் மரணம் உயிர்ப்பின் மகிமையில்
நாடுகள் அனைத்தும் ஒன்றித்து மகிழ்கையில்
பாடுகள் ஏற்ற செம்மறிகளாகவே பலியாகி நீரும்
நாடுகள் அனைத்திற்கும் எண்பித்தீர் உம் சாட்சியமதை

பரமன் இயேசு பலிக்களம் நோக்கிப் பயணிக்கையில்
பாரச் சிலுவை தோளில் அழுத்த கற்கள் முட்கள் காலை உறுத்த
அகோர அடிகளால் தசைகள் கிழிந்து குருதி பாய்ந்த நிலையை
கொடூரமாய்க் கொல்லப்பட்ட உம் பலியும் எண்பித்துள்ளதே!

உள்ளத்து தூய்மையை உத்தமனார்க்குரிய தாக்கி
கள்ளமற்ற சிந்தையுடன் கரம் கூப்பித் தொழுகையில்
பொள்ளெனப் பாய்ந்த குண்டுகள் கொடும் ஒலியாய் சிதற
வெள்ளமாய் உம் குருதியும் ஆலயமதை நிறைத்ததோ?

நெஞ்சம் வெடித்திடும் அகோரக் காட்சியை - எம்மால்
கொஞ்சமேனும் பொறுத்திட முடியாது குமுறுகின்றோம்
மஞ்சத்தில் உறங்கிடும் கொடுங்கோலரும் உணர்ந்திடவே
கெஞ்சுகின்றோம் இறையவனே! உம் நீதியை வெளிப்படுத்தும்

சாட்சிய வாழ்வையும் மரணத்தையும் வித்தாக்கிய
மாட்சி பொருந்தியவர்களே எம் பரம்பரையினர்
கிறிஸ்தவர்கள் எங்கெல்லாம் அநீதியாய் பலியாகின்றனரோ
கிறிஸ்துவே அங்கெல்லாம் பலியாக்கப்படுகின்றார் அன்றோ?

இறை சந்நிதானமதில் உன்னத பலியில் பங்கேற்றே
மறை சாட்சிகளானும் உத்தம வாழ்வைக் கண்டோம்
குறையுற்ற எம் வாழ்விற்கு உம் தியாகப் பலி விடியலாகுதே!
நிறை வாழ்வில் நிச்சயம் உமக்குப் பேரோளி உண்டு.
முடிவில்லா மாட்சியில் உங்கள் ஆன்மா மகிழ்ச்சிகொள்ள
முடிவில்லா மகிமையாளனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆக்கம் :- S.M. வுலோறன்ஸ்**
**(இளவாலை)**

# இலங்கை மீதான தாக்குதல் அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட செய்தி

ஈழத் தமிழர் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்ட காலத்தில், பூகோள அரசியல் போட்டிக்குள் இலங்கைத்தீவு உட்படவில்லை. திருகோணமலை அம்பாந்தோட்டைத் துறைமுகங்களை மேற்குலக நாடுகள் இலக்கு வைத்திருந்தாலும் விரும்பிய நேரத்துக்குச் சுதந்திரமாக தமது போர்க்கப்பல்களை அனுப்பக் கூடிய நிலைமையும் இருந்திருக்கவில்லை. ஆக 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில், மிகவும் இலகுவான முறையில் இலங்கைத்தீவில் தாம் நினைப்பதை சாதிக்கக் கூடியதாக இருக்கின்றது இந்த மேற்குலக நாடுகளுக்கு.




இவ்வாறனதொரு சூழலில்தான் இலங்கைத்தீவில் ஞாயிற்றுக்கிழமை குண்டுகள் வெடித்திருக்கின்றன. அமெரிக்கா எங்கு கால்பதிக்க முற்படுகின்றதோ அங்கெல்லாம் தாக்குதல் நடத்த முடியும் என்ற செய்தி இந்தக் குண்டுத் தாக்குதல் மூலம் உணர்த்தப்பட்டிருக்கின்றது. இந்தியா பாகிஸ்தான் முரண்பாடும் சீனா பாகிஸ்தான் உறவையும் இந்தத் தாக்குதலின் பின்னணியாக இருக்குமோ என்ற கேள்விகள் எழுகின்றன.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடை-யேயான முரண் நிலையே அமெரிக்க இந்திய உறவுக்குக் காரணம். இந்த அமெரிக்க இந்திய உறவுதான் பாகிஸ்தான் சீன உறவுக்குப் பக்கபலமாகவும் அமைந்ததெனலாம். எனவே இந்து சமுத்திர பிராந்தியத்திற்கான ஆதிக்கப் போரின் வடிவமாவும் இலங்கைத் தீவில் நடந்த குண்டுவெடிப்பை நோக்கலாம்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலை கருத்தில் கொண்டே தாக்குதலை நடத்திய ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள்நன்குதிட்டமிட்டுள்ளனர். பௌத்த சிங்கள மக்கள் மீதோ பௌத்த விகாரைகள் மீதோ தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால். அது முஸ்லிம்களை நோக்கிய எதிர்த்தாக்குதலுக்கு வழி சமைத்திருக்கும்.

> இலங்கையில் எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டுத் தப்பித்துவிடலாம் என்பது இலங்கை இராணுவத்துக்கு மாத்திரமல்ல பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடும் வெளிச்சக்திகளுக்கும் தெரிய வந்துவிட்டது என்பதே கொழும்பில் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு வழங்கியிருக்கும் தகவலாகும்.

இதன்காரணமாகவே கிறிஸ்தவ தேவாலயங்களும் வெளிநாட்டவர் தங்கும் நட்சத்திர ஹோட்டேல்களும் மற்றும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பும் தாக்குதலுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

சிங்கள, தமிழ் கிறிஸ்தவ மக்களும் வெளிநாட்டவர்களுமே குண்டுத் தாக்குதலில் இறந்திருக்கின்றார்கள். எனவே தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கமும் இலக்கும் சரியானதாகவே அமைந்துள்ளன.

இந்தத் தாக்குதல் திடீரென நடத்தப்பட்டதல்ல. நீண்டநாட்கள் திட்டமிடப்பட்டே உரியநேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இது ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளின் தாக்குதலாக இருந்தாலும் உள்ளூர் நபர்களின் அல்லது குழுக்களின் ஆதரவுகள் நிச்சயமாக இருக்க வேண்டும்.

இலங்கை ஏனைய அயல் நாடுகளோடு நிலத்தொடர்புடையதல்ல. இலங்கை ஒரு தீவு. ஆகவே முதன் முறையாக வெளிச் சக்திகளின் தீவ-ிரவாதத் தாக்குதல் ஒன்று நிலத் தொடர்பில்லாத இலங்கைத் தீவில் நடத்தப்பட்டிருக்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் சிரியா வில் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று அமெரிக்கா மார் தட்டிக் கொண்டிருந்த நிலையில் நிலத் தொடர்பற்ற தனித்தீவான இலங்கையில் தாக்குதல் நடத்தப் பட்டுள்மை அமெரிக்காவை மாத்திரமல்ல இந்தியாவையும் அதிர்ச்சியடைய வைத் துள்ளது.

1997 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்திருந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில்தான் உண்மையான பயங்கரவாதம் இலங்கைக்கு வந்துள்ளது என்பதை அமெரிக்காவுக்கு இந்தத் தாக்குதல் உணர்த்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலிலும் கூட அமெரிக்கா புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களை கைது செய்வது வன்னியில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று புகலிடம் கோரியுள்ள முன்னாள் போராளிகளைக் கைது செய்வது விசாரிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு சிங்கள பௌத்த மக்களையும் இலங்கை அரசாங்கத்தையும் சாந்தப்படுத்தும் வேலைத் திட்டங்களிலேயே ஈடுபடுகின்றது.

இறுதிப் போரின்போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள். இன அழிப்புத்

**அ.நிக்ஸன்**

தொடர்பான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கூட விசாரணை நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை 2015 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கம் இலங்கையில் அமைக்கப் பட்ட பின்னர் கைவிடப்பட்டுள்ளன.

ஆகவே இதன் பின்னணியிலே தான் இலங்கையில் எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டுத் தப்பித்துவிடலாம் என்பது இலங்கை இராணுவத்துக்கு மாத்திரமல்ல பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடும் வெளிச்சக்திகளுக்கும் தெரிய வந்துவிட்டது என்பதே கொழும்பில் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு வழங்கியிருக்கும் மற்றுமொரு தகவலாகும். இலங்கை தொடர்பான விடயத்தில் அமெரிக்கா இவ்வாறான அணுகுமுறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது தான் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது உறவின் மூலம் இலங்கையை

## தமிழ் சிங்கள கிறிஸ்தவ மக்களும் வெளிநாட்டவர்களும் தாக்குதல் இலக்காகத் தெரிவானதன் நோக்கம்?

எப்படித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் அல்லது அமெரிக்கா இலங்கையில் நிலைகொள்வதை எவ்வாறு தடுக்க முடியும் என்ற உத்திகளைக் கையாளுகின்றன. அதன் ஆரம்ப வெளிப்பாடுதான் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு என்று கூறலாம்.

இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில்தான் தமது இராணுவ முகாம்களை அமைத்துள்ளது. நூற்றுக்கு தொண்நூற்றி ஐந்து சதவீதமான இராணுவத்தை வடக்குக் கிழக்கில்தான் இலங்கை அரசாங்கம் வைத்திருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் உள்நாட்டுப் போர் ஒன்று நடப்பதாகவே இலங்கை அரசாங்கம் கருதுகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை அபகரித்து இராணுவ முகாம் அமைத்தல், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்று அங்கேதான் முழுக் கவனத்தையும் இலங்கை இராணுவம் செலுத்துகின்றது.

ஆனால் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற தாக்குதலின் பின்னரான நிலைமை என்பது இலங்கை இராணுவத்தின் சிந்தனையை மாற்றியிருக்கின்றது. சீன, பாகிஸ்தான் உறவின் மூலம் இலங்கையில் அரசியல் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய சாதகமான நிலைமையும் உண்டு.

குறிப்பாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், மைத்திரி, மஹிந்த முரண்பாடுகள், கோட்டாபய, பசில் ராஜபக்ச மற்றும் பிரதான அரசியல் கட்சிகளிடையேயான உள்ளக முரண்பாடுகள் என இலங்கை அரசியலில் தற்போது எழுந்துள்ள குழப்பமான சூழலையும் சீனா, பாகிஸ்தான் பயன் படுத்துகின்றது. இவ்வாறு உள்ளக முரண்பாடுகளைப் பயன்படுத்தும் அணுகுமுறைகள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னரான சூழலிலும் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன.

வடக்குக் கிழக்கில் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, தமிழ் சிங்கள முரண்பாடுகளுக்கு மத்தியில் வடக்கு- கிழக்கில் சைவத் தமிழ் மக்களுக்கும் கிறிஸ்தவ தமிழ் மக்களுக்கும் இடையே உள்ளக முரண்பாடுகளை பாகிஸ்தான் தூண்ட முற்படுவதாக விடுதலைப் புலிகள் இந்தியப் புலனாய்வுத் துறைக்கு அறிவித்திருந்தார்கள் என்று அப்போது புலம்பெயர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சுகள் இடம்பெற்றவேளை கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் வன்முறைகள் அவ்வப்போது ஏற்பட்டிருந்தன. அப்போது கூட அவ்வாறான சந்தேகம் எழுந்தன. ஆனால் அப்போது அமெரிக்காவோ இந்தியாவோ அந்தச் சந்தேகங்கள் தொடர்பாக அக்கறை செலுத்தவில்லை. மாறாக புலிகள் மீதே குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.


தற்போது 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இந்துத்துவ பிரச்சாரங்களை இந்திய மத்திய அரசு திட்டதிட்டுச் செய்கின்றது. இதற்காகவே ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பிணைந்திருக்கும் சைவ சமய கிறிஸ்தவ உறவுகளை உடைத்து முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காகவே மூத்த தமிழ் உறுப்பினர் ஒருவர் பயன்படுத்தப்படுகின்றார் என்பது வெளிப்படையாகவே தெரிந்த உண்மை. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களோடு தமிழ் மக்களை முரண்பட வைக்கும் வேலைத் திட்டங்களில் இந்துத்துவ அமைப்பு ஈடுபட்டிருக்கின்றது.

இலங்கையின் பௌத்த குருமாருடன் இணைந்துகூட இந்துத்துவ அமைப்பு சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது. மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் சைவத் தமிழர்களும் கிறிஸ்தவ தமிழர்களும் முரண்பட்டு மோதிருக்வும் இந்துத்துவ அமைப்பே காரணம் என பொது மக்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

ஆகவே வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ்ச் சைவ மக்களும் கிறிஸ்தவத் தமிழ் மக்களும் மற்றும் முஸ்லிம் மக்களும் இந்திய. பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினரின் பிரித்தாளும் தந்திரங்களுக்கு சிக்குப்படாமல் அவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு எடுபடாமல் மாற்று அணுகுமுறைகளை கையாள வேண்டும். இந்தக் குண்டுத் தாக்குதல் அந்தப்படிப்பினையைத்தான் விட்டுச் சென்றுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரப் போக்குடைய காத்தான்குடி முஸ்லிம்கள் இணைந்து வரமாட்டார்கள் அல்லது இணைந்து செயற்பட முடியாது என்று கருதினால் குறைந்த பட்சம் கிழக்கு மாகாணத்தில் வேறு பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களுடன் இணைந்து வெளிச் சக்திகளின் பிரிவினைவாத செயற்பாடுகளுக்குத் துணைபோகாமல் இருப்பதே விடுதலை வேண்டி நிற்கும் தேசிய இனங்களின் பிரதான கடமையா-கும். போர்க்காலத்திலும் சமாதானப் பேச்சுக்காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரையும் அவர்களின் செயற்பாடு களையும் தாலாட்டிச் சீர்தூக்கிப்பார்த்த அமெரிக்காவும் இந்தியாவும் தற்போது ஏற்பட்டுள்ள எதிர்விளைவுகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கப்போகின்றார்கள்?




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி. செ. அன்புராசா அமதி

(மதுராங்கன், பல்லாவி)

**கேள்வி: உயிர்த்த ஞாயிறாகிய 21.04.2019 அன்று தேவாலயங்களிலும் நட்சத்திர விடுதிகளிலும் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் எதனைச் சுட்டிநிற்கிறது?**

**ப:** மதுராங்கன், 'மனிசன மனிசன் சாப்பிடுறாண்டா தம்பிப்பயலே, இது மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலே!' என்ற பழைய பாடல்தான் நினைவுக்கு வருகிறது! இத்தகைய ஈனச்செயல்களில் மனிதன் மனிதனுக்கு எதிராக ஈடுபட முடியுமா என்ற ஆச்சரியத்தையே ஏற்படுத்துகிறது.

(அருள், யாழ்ப்பாணம்)

**கே:** குண்டுத்தாக்குதல்கள் குறித்த எச்சரிக்கைகளை பொறுப்புள்ள அதிகாரிகள் அலட்சியம் செய்தது எதனை வெளிப்படுத்துகின்றது?

**ப:** அருள், நமது நாட்டில் பொறுப்புள்ள அதிகாரிகள் எத்தகைய பொறுப்புணர்வோடு செயலாற்றுகிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டும் ஓர் உதாரணமாக இதனைக் கொள்ளலாம்! பலநூறு உயிர்களைப் பலியெடுக்கும் இவ்விடயம் மட்டிலேயே இவர்கள் இவ்வாறு செயற்படுவார்கள் என்றால் ஏனைய விடயங்கள் குறித்து எவ்வாறு செயற்படுவார்கள் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்!

(பிரியா, மன்னார்)

**கே:** முப்பது, நாற்பது ஆண்டுகளாகப் போர்க்காலத்தில் சந்தித்திராத பயங்கரக் குண்டுவெடிப்புக்களை இப்போது காண்கிறோமே! இப்படி எப்போதாவது தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதா?

**ப:** பிரியா, போர்க்காலத்தில் தாக்குதல்கள் எந்நேரமும் நடத்தப்படலாம் என்ற நிலையிருந்தது. அதனால், மக்கள் ஓரளவிற்கு அந்நிலையை எதிர்கொள்ள ஆயத்த மாயிருந்தார்கள். ஆனால், எவ்வித குழப்பமான சூழல் நிலவாத சூழ்நிலையில், அமைதியாக இருந்த ஒரு காலத்தில் இத்தகைய அசம்பாவிதம் உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். நமது நாட்டைப் பொறுத்தவரை இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவந்த மோதல்களில் பொதுமக்கள் குறிவைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றில் தேவாலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. ஆனால், வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எத்தனை உயிர்களைப் பலியெடுக்கமுடியுமோ அத்தனை அப்பாவிகளைக் கொன்று குவிக்கவேண்டும் என்ற பாணியில் இதுவரையில் தாக்குதல்கள் இடம்பெறவில்லைஎன்றுதான்கூறவேண்டும். தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் நாட்டிற்கு ஏற்பட்ட பாரிய அழிவு என்பதைச் சுட்டிக்காட்டிய முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க புலிகள்கூட இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. மிக மிகக் கொடூரமாக நடத்தப்பட்ட ஒரு மனிதப் பேரவலம் இக்குண்டுத் தாக்குதல்கள்!

(ஆனந்தன், கிளிநொச்சி)

**கே:** குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட தேவாலயங்களைத் திருத்துவதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. இது பற்றி..?

**ப:** இப்பணத்தினை திருஅவை நிராகரிக்கவேண்டும், ஆனந்தன்! ஏனெனில், இவ் அனர்த்தத்தை தடுத்து நிறுத்துவதற்குரிய எச்சரிக்கைகள் வழங்கப்பட்டும் அவற்றின் மட்டில் அரசாங்கம் அக்கறையற்று இருந்துவிட்டு இப்போது தாக்கப்பட்ட தேவாலயங்களைப் பூசி மினுக்க முயற்சிப்பது சிறுபிள்ளைத்தனமான செயற்பாடாகும்! 'அப்பணத்தைக் கொண்டு, செய்யவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தப் பயன்படுத்துங்கள்! இனிமேலும், இதுபோன்ற மனிதப் பேரவலம் நடந்தேறாது பார்த்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிடவேண்டும்!' தேவாலயங்கள் திருத்தப்படவேண்டும், இறந்தவர்களின் உறவுகளுக்கு உள சமூக ஆற்றுப்படுத்தலோடுகூட உதவிகள் வழங்கப்படவேண்டும், படுகாயமுற்றவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் நிலையான உதவிகள் கொடுக்கப்படவேண்டும். ஆனால், இவற்றை நல்மனம்கொண்ட நமது மக்கள், நிறுவனங்கள் ஊடாகச் செய்வதே சிறந்தது! இவ்விடயத்தில், பிச்சையைப் பெறாதிருப்பதே உகந்தது!

(குணம், யாழ்ப்பாணம்)

**கே:** இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான ஐஸ்ஐஸ் அமைப்பைச் சார்ந்த தற்கொலைக் குண்டுதாரிகளால் தேவாலயங்களிலும் நட்சத்திர விடுதிகளிலும் மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைப் போன்ற தாக்குதல்களை எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க இஸ்லாமியர்கள் எவ்வாறு உதவலாம்?

**ப:** குணம், உண்மையான இஸ்லாமியர்கள் இவ்வீனச் செயலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நல் மனம் படைத்த முஸ்லிம்களும் இத்தாக்குதல்களால் மன உளைச்சல் அடைந்திருக்கிறார்கள் என்பது உறுதி. ஆனால், இவர்கள் தங்கள் வெவ்வேறு அமைப்புக்கள் ஊடாக இரங்கல் செய்திகளையும் கண்டன அறிக்கைகளையும் வெளியிடுவதோடு நின்றுவிடாமல் தங்களிடையே இருக்கும் தீவிரவாதப் போக்குடைய குழுக்களையும் நபர்களையும் அடையாளம்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு முஸ்லிம் இனத்தவரான இஸ்லாமிய மதத்தினர் முன்வர வேண்டும். இல்லையேல், இத்துயரம் தொடர்வதற்கும் இனங்களுக்கிடையில் விரிசல்கள் மேலும் விரிவடைந்து பல விபரீதங்கள் ஏற்படவும் வழிவகுக்கும். அப்போதுதான் மதங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்தி அனைத்து மக்களும் இணைந்து வாழக்கூடிய சூழலை மீண்டும் ஏற்படுத்த முடியும். வலம்புரி ஆசிரியர் 27.04.2019 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டது இங்கு சுட்டிக்காட்டக் கூடியது: " நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், இதுவிடயத்தில் கணிசமான பங்களிப்பை முஸ்லிம் சகோதரர்களே வழங்க வேண்டும். ஆகையால், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பை பெறுவதுபற்றி சிந்திப்பதே பொருத்தமானதாகும்" என்கிற ஆலோசனை மேற்சொன்ன நம் கருத்தை உறுதிப்படுத்துகிறது.

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**




அனுதர்ஷி லிங்கநாதன்
விரிவுரையாளர்
ஊடகத்துறை – யாழ். பல்கலைக்கழகம்

இலங்கை பல்லினங்களையும் பல்வேறுபட்ட பண்பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் வாழுகின்ற நாடு. இத்தீவில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் எண்ணிக்கையில் சிறிய அளவிலான சில சமூகங்களும் வாழ்கின்றனர். இப்பல்லினத் தன்மையும் இந் நாட்டின் சிறப்பம்சம் தான். இருந்தும் கடந்த காலங்களில் மூன்று தசாப்த காலத்திற்கு மேல் தொடர்ந்த மோசமான ஆயுத யுத்தத்தினால் இம் மக்கள் பாதிக்கப்பட்டனர். உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் கூட இவர்கள் யுத்தம் தந்த பாதிப்பிலிருந்து மீளாதிருக்கின்றனர்.

இந்த நிலையில் ஈஸ்டர் தினத்தில் கடந்த 21 ஆம் திகதி கத்தோலிக்க தேவாலயங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றின் மீதும் இடம்பெற்ற அடிப்படைவாதிகளுடைய தாக்குதல்கள் நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இது யாரும் எதிர்பார்க்காத ஒரு சம்பவம். இதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருக்கின்ற நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு தேசிய தௌஹித் ஜமாத் மற்றும் ஜமாத் ஈ மில்லது இப்ராஹிம் போன்ற மத அடிபடைவாத அமைப்புக்கள் துணை போயிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. இது சர்வதேச பயங்கரவாதமாக உருவெடுத்துள்ள நிலையில், இப் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அரசாங்கம் கரிசனையுடன் செயற்படுவது அவசியம்.

தீவிரவாதத் தாக்குதல்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்தாலும் இலங்கையில் இடம்பெற்ற இத் தாக்குதலானது பலரின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது. ஏனெனில் இலங்கையில் உள்நாட்டு போர் இடம்பெற்ற காலத்தில் வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் போருக்குப் பின்னரான இந்தப் பத்து வருடங்களில் முரண்பாடுகள் இருந்தாலும்மக்கள் பல்வேறு வடிவங்களில் மத அடிப்படைவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும் பாரிய உயிர் இழப்புக்களை ஏற்படுத்துவனவாக அண்மைய தாக்குதல்கள் அமைந்துவிட்டன. மக்கள் கூடும் இடங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இக் குண்டு வெடிப்புக்களைத், தற்கொலைத் தாக்குதல்களைச் சாதாரண விடயமாகக் கருதிவிட முடியாது. இத் த்தாக்குதல்களை தொடர்ச்சியாகப் பல சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் மக்கள் எவ்வாறு உணர்ந்தார்களோ அதேபோன்றே இன்றும் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். சுற்றி வளைப்புக்கள் தொடர்கின்றன. மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. இத் தீவிரவாதத் தாக்குதல் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் பல்வேறு தரப்பினராலும் கட்டியெழுப்பப்பட்டு வந்த நல்லிணக்கத்தையும் அமைதியையும் நொடியில் தகர்த்தெறிந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும். அது மட்டுமல்லாமல் உளவியல் ரீதியான தாக்கங்களையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டுயுத்தத்தைமுடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என்ற இறுமாப்பில் நாட்டில் வேர் விட்ட தீவிரவாதத்தை நாட்டின் பாதுகாப்புத் தரப்பு கண்டுகொள்ளாது விட்டிருக்கிறது. இது இலங்கை அரசாங்கத்தினுடைய பாரிய பின்னடைவு.

மத அடிப்படைவாத அமைப்புக்கள் உலகெங்கும் இயங்கிவருகின்றன. எல்லா மத அடிப்படைவாதத்தின் பாதிப்புக்கள் இன, மத, மொழி, பால்நிலை, சாதி என எல்லா வர்க்கங்கள் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. மதங்கள் அன்பையும் அமைதியையும் போதிப்பனவாகவும் சமூக நீரோட்டத்துடன் பயணிப்பவையாகவும் அனைவரையும் சமத்துவத்துடன் நோக்குபவையாகவும் இருத்தல் வேண்டும். மூடநம்பிக்கைகளையும் பிழையான புரிதல்களையும் கொண்டிருக்கின்ற மதப்பற்று காலப்போக்கில் மத அடிப்படைவாதமாகவோ பயங்கரவாதமாகவோ உருவாகிவிடுகின்றது. பண்பாட்டின் இறுக்கமான கோட்பாடுகளும் அவ்வாறானதே. இத் தாக்குதல்களை நடத்தியவர்கள் இலங்கையர்களாக இருக்கின்ற நிலையில், இது மக்கள் மத்தியில் பயத்தையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு சில முஸ்லிம்களின் இச் செயற்பாடு ஏனைய முஸ்லிம் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இத் தாக்குதலை இஸ்லாமிய அடிப்படைவாதம் என முத்திரை குத்தி அதனை அழிக்க முற்படுகின்ற அரசியல் நகர்வுகள் பௌத்த அடிப்படைவாதம் வலுவடையத் தீனி போடலாம். ஏன் ஏனைய மத அடிப்படைவாதங்கள் வளரவும் காரணமாகலாம்.

## 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 13 . 05 . 1968

உதிர்வு 18 . 05 . 2009



குருத்துவம் : 14.05.2003

### அருட்தந்தை ம. ததேயுஸ் சறத்ஜீவன்

சறா! உன் உயிர் ஆபத்தில் இருந்த நேரத்திலும்,
'என் மக்களுக்கு என்ன நடக்கும்' என்ற ஏக்கமே
உன் மனதில் இருந்தது. 'மக்களுடனேயே இருப்பேன்' என்று
இறுதி மூச்சுவரை உறுதியுடன் இருந்தாய்.
பத்து வருடம் போனால் என்ன பத்தாயிரம் வருடங்கள் கடந்தால் என்ன,
உன் மீது கொண்ட பாசம் என்றுமே நீடித்திருக்கும்.

இவரின் ஆன்மசாந்திக்காக 18-05-2019 சனிக்கிழமை அன்று காலை 5.30மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், 18-05-2019 சனிக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் :
குடும்பத்தினர்
இல.5 (30) சென் பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்

உருத்திரபுரம் பங்குத்திருச்சபை
புனித பற்றிமா அன்னை ஆலயம்

## வன்முறைகளுக்கு வழிகோலும்....

(10ம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கம் முஸ்லிம்களின் மீது அடக்குமுறையைப் பிரயோகிப்பதற்கும் இத் தாக்குதல் வழிகோலியுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஏனைய சமூகங்கள் முஸ்லிம் மக்களை சந்தேகத்துடன் நோக்குவதற்கும் காரணமாகியுள்ளது. முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்கும் இடையில் பாரிய விரிசலை ஏற்படுத்தியுள்ளதுடன் அப்பாவி மக்களின் வாழ்க்கையை சிக்கலாக்கியுள்ளது. இன்று முஸ்லிம்கள் குறிப்பாக வெளியிடங்களில் தொழில்புரிவோர் மற்றும் மாணவர்கள் வாடகைக்கு வீடுகளைப் பெறுவதில் கூடச் சிக்கல்களை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

ஆனாலும் சக மனிதர்களை மதிக்கக்கூடிய, மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபடக்கூடிய ஒரு வகுப்பினரும் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பது ஆரோக்கியமான விடயம்.

இத் தாக்குதல்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுடைய சமூகப் பொறுப்புணர்வு பாராட்டத்தக்கது. மேலும் பலர் சமாதானத்துடன் வாழவேண்டும் எனப் பாடுபடுகின்றார்கள்.

ஆனால் அரசியல்வாதிகளுடைய நிகழ்ச்சி நிரல் வேறாக இருக்கின்றது. நடந்த சம்பவங்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதும் இனவாதத்தைத் தூண்டுவதாகவும் அவர்களது செயற்பாடு இருக்கிறது. தேர்தல் பிரசாரங்களை மரணச் சடங்கில் மேற்கொள்பவர்களாக அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

இத் தாக்குதலைக் காரணமாக வைத்து நாட்டினுள் நுழையும் சர்வதேச சக்திகள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் செயற்படலாம். இது நாட்டுக்கு அச்சுறுத்தலாக மாறும் வாய்ப்புமுள்ளது. மேலும் சர்வதேசத்தால் இலங்கைப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிறைந்த நாடக அடையாளம் காட்டப்படும் பட்சத்தில் அது இலங்கைப் பொருளாதாரத்தில் பா-ரிய பின்னடைவுகளைக் கொண்டு வரும். இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடையலாம். அதுமட்டுமல்லாமல் இலங்கை ரூபாவின் பெறுமதியிலும் அது தாக்கத்தைச் செலுத்தும்.

இது சாதாரணமான ஒரு விடயம் அல்ல. அமைதியான நாட்டிற்கு பயங்கரவாதம் எல்லா வகையிலும் ஆபத்தானது. இது எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். மதஅடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதம் போன்றவை அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் தகர்த்தெறியப்பட வேண்டும். மத அடிப்படைவாதங்களிற்கு எதிரான பலமான சட்டங்கள் எமது நாட்டில் இல்லை. மத அடிப்படைவாதத்திற்கு எதிரான சட்டமாக நாம் பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கிறது எனக் கைகாட்டிவிட முடியாது.

அது சமூகத்தின் பல மட்டங்களிலும் வேர்விட ஆரம்பிக்கும் மத அடிப்படைவாதத்தை எந்த வகையிலும் இல்லாதொழிக்கப் போவதில்லை என்பதே உண்மை.

இத் தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதென்பது சவால் மிக்கதாகும். இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வே சக வாழ்வுக்கு வழிகோலும். இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் உணர்ச்சி வசப்படாது நிதானமாகச் செயற்படுதல் அவசியம். அதன்மூலமே வன்முறைகளுக்கு முடிவுகட்ட முடியும்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 03 . 1935

மறைவு 04 . 06 . 2018



### அமரர் பொன்ராசா அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் கென்றியரசர் கல்லூரி - இளவாலை)

அப்பா என்றொரு ஆலமரம் இறம்பையூரின் இறைப்புதல்வன்
இன்று உங்கள் அன்பின்றி நாங்கள் அங்கலாய்க்கின்றோம்
அன்பின் இலக்கணமாய், அரவணைப்பின் உறைவிடமாய், கள்ளமில்லா
சிரிப்புடனே, நகைச்சுவைக் கதை பேசி, நீங்கள் வாழ்ந்த காலங்கள் பசுமையாய்
எம் நெஞ்சில் நிலையாய் இருக்குதப்பா, விண்ணாளும் தேவன் பாதம்
விருப்புடன் சென்ற புண்ணியனே, ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம்
நெஞ்சம், உயிருள்ள காலம் வரை உம் நினைவுடனே வாழ்வோம்
அப்பா.நிகழ்வுகள் அனைத்தும் நினைவுகள் ஆகி நிரந்தரமாயிற்று, சிரித்த முகம்
எம்மை விட்டு பிரிந்து, உம் பாசம் ஒன்றே எம்மை விட்டுப்பிரியாது, எம்
வாழ்நாள் எல்லாம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 03-06-2019 இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

"மகிமா சாந்தி"
407 ஹொரப்பொத்தான வீதி,
இறம்பைக்குளம், வவுனியா

மாறா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
024 222 1984

AD - 34

## விடுதலை இறையியலும் தமிழ்த் திருச்சபையும் விரிவுரைகளுக்கு அழைப்பு

அழைத்தல் ஆண்டை முன்னிட்டு புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி முன்னெடுக்கும் தொடர் விரிவுரைகள் ஆழ்ந்த இறையியல் புலமையும் நீண்ட அனுபவமும் கொண்ட அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரால் நிகழ்த்தப்படுகின்ற.

விரிவுரைகளின் நிறைவில் கிரமமாகப் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படும். விரிவுரைகள் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 11.30 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள புனித மாட்டினார் கட்டடத்தொகுதியில் நடைபெறும்.

இறையியல் உலகில் இது ஒரு புதிய விடயமாகஇருப்பதனால் இதை முன்பு இறையியல் படித்த குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் மிகப்பொருத்தமானதாக இருக்கப்போகின்றது. விரிவுரை 11.05.2019 அன்று காலை 11.30 மணிக்கு ஆரம்பமாகும். பங்குபற்ற இருப்போர் தயவு செய்து உடனடியாக அருட்பணி ம. வி. இ. ரவிச்சந்திரன் (0777357494) அல்லது அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாருடன் (0763531104) தொடர்பு கொள்ளவும்.

## நினைவுகள் நீடிப்பவை....



குறிக்கோளில்லாமலே
குருவாக வந்த குருத்துவமணி
மகத்தான குருத்துவ வாழ்வின்
பணிகளை பணிவாகவும் துணிவாகவும்
எளிமையாக ஏழ்மையை ஏறெடுத்து
சிறப்பாக சித்தரித்த ஜீவன் நீ!

வாழ்வை வாழ்க்கையோடு வழக்காடி
விளையாட்டாக விளையாடி
விதவிதமாய் வாழ்வை வினோதமாய்
வித்திட்ட வித்தகன்
விந்தையாக மண்ணகம் விட்டு
விண்ணகம் சென்றதேன்?

இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை
பாச உறவில் பழகிய பந்தங்கள்
நினைத்து நினைத்துப் பார்க்க
கண்களுக்கு சொல்லி நிறுத்தமுடியாத
கண்ணீர்... நினைவுகளால் - என்றும்
நினைவுகள் மறக்க முடியாது
நீடித்து நிலைப்பவை... ஜீவா

S.B.பீற்றர் போல்

## வளர்ச்சி காணும் கிளாலியூர்

கிளாலி சிறியதோர் கிராமம் ஆனாலும் சிறியதோர்சோலை என்று கூறுமளவுக்கு அந்தவூர் மக்கள் மனநிறைவோடு வாழ்ந்தார்கள்.அந்த ஊரில் பல அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியாக்கப்படாவிட்டாலும் கிடைத்தவற்றைக் கொண்டு மகிழ்ச்சியாக வாழப் பெற்றோர் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டினார்கள். அதற்குக் காரணம் அந்தச்சிறிய ஊரானது ஆண்டவனை அகத்தினில் அக்கினியாக வளர்த்திருந்தது அதனால் அங்கு நான்கு குருக்களும் ஏழு துறவற சகோதரிகளும் உருவாக உரமிட்டிருந்தார்கள்.பலர் தமது பிள்ளைகளை அர்ப்பணித்திருந்தார்கள். ஆறு ஆலயங்கள் காணப்படுகின்றமையானது அங்குள்ள சிறப்பம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது ஆனாலும் அம்மக்களின் ஒற்றுமைக்குக் குறைவே இருக்கவில்லை.

எமது கொடிய போரானது பெரிய அளவில் பாதிப்பை விதைத்துவிட்டுச் சென்றுள்ளது. அத்துடன் அந்தக் கிராமத்தின் வளங்களைச் சூறையாடிவிட்டது. ஆனால் பொன் புடமிடப்படுவதுபோல அந்தக்கிளாலி மக்கள் விசுவாசத்தைக் கைவிடவில்லை.

"கடுகளவு விசுவாசம் மலை-யையும் பெயர்த்துவிடும்" என்று மனவுறுதியுடன் இறைவனை நம்பி வாழ்ந்தார்கள்.

ஆண்டவனின் கருணையால் அண்மைய காலங்களாகக் கிளாலிக் கிராமத்தில் சிற்சில மாற்றங்கள் அரங்கேறி வருகிறதானது மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. உண்மையில் நீண்ட இடைவெளிக்குப் பின்பு மின்சாரத்தை வழங்கிப், பாடசாலையை ஓரளவேனும் ஒப்பேற்றிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரை நன்றிடன் நினைக்கிறோம்.

இது அந்த மக்களுக்குப் பெரிய ஆறுதலாகவும் அக்களிப்பாகவும் உள்ளதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். மிக முதன்மையாக வேண்டப்பட்ட வீதி ஏறத்தாழ அரைவாசி பூர்த்தி அடைந்து விட்டது. மிகுதியையும் மிக விரைவில் முடித்துத் தருவதாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தது மகிழ்ச்சி. அத்துடன் பல திட்டங்களுக்கான நிதியையும் ஒதுக்கியமையை நன்றியுடன் நினைக்கிறோம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்களால் 81 மில்லியன் ரூபாய்கள் கிளாலிக் கிராமத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளதை எண்ணி அம்மக்கள் நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்து மகிழ்கிறார்கள்.

அத்துடன் கடற்தொழிலாளர்களுக்கான கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சினால் அச்சுப்பிரதி இயந்திரம் மற்றும் தேவையான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அந்தக் கிராமத்தில் ஒரு தனியார் கல்வி நிறுவனம் மிக மிக நேர்த்தியாகக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதை நோக்கும்போது கேட் கும்போது மனநிறைவைத் தருகிறது "செல்வத்துட் சிறந்த செல்வம் கல்விச் செல்வம்"

அச் செல்வத்தை ஏழை மக்களுக்குக் கொடுப்பதென்பது அவர்களுக்கான மூலதனமாகும். அவர்களுக்கு அடிப்படைத்தேவைகளில் அத்தியாவசியத் தேவையை வழங்கிய அந்நிறுவனத்தின் உரிமையாளர்களை நன்றியுடன் நினைக்கிறோம்.

அதேவேளை ஊடகங்கள் பெரும் பங்களிப்பைச் செய்ததன் ஊடாகக் கி-ளாலிக் கிராமத்தை வெளியே கொண்டு வரமுடிந்தது.

இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைக்கும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் கிளாலி வாழ் மக்கள் நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறார்கள்.

திரேஸ் மரியதாஸ்

## இவர்களை மன்னியும்

கொச்சிக்கடையில்
சிலுவையொன்று
சரிந்து விழுந்ததா...
இல்லை
மட்டக்களப்பில்
பைபிளொன்று
பக்கங்களை
இழந்ததா...
நீர்கொழும்பில்
(செப)
மாலையொன்று
அறுந்து
விழுந்ததா...
இல்லை
இலங்கையின்
இதயத்தில்தான்
இடி விழுந்ததா...

வத்திக்கானின்
வரலாற்றிலே
கறை படிந்ததா...
இல்லை
உரோமாபுரியின்
வாசலில்தான்
உயிர் பிழிந்ததா...


பாப்பிறையின்
இதயத்தில்தான்
வாள்
பதிந்ததா...
இல்லை
கருதினாலின்
கைகளில்தான்
உதிரம்
படிந்ததா...

சாத்தானின்
செயலொன்று
மேடையேறியதோ
இல்லை
சற்பத்தின்
சாபமொன்று
சபையேறியதோ

அர்ச்சேஸ்ர
அந்தோனியாரே
அருள்மிகு
செபஸ்தியாரே
சீர்மிகு சீயோனே
இவர்கள்
அறியாமல்
செய்தார்கள்
இவர்களை
மன்னியும்...

சட்டத்தரணி
ஜொனி மதுரநாயகம்

# நினைப்போம் திடுக்கிடுவோம் நினைவுவரும் வேளையெல்லாம்









இந்த இரத்த தெளிப்புக்களில்
சாதிகள் கலந்திருக்கின்றன.
மதங்கள் ஒருசேரவுள்ளன.
இனங்கள் அருகருகே
ஒட்டிக் கிடக்கின்றன.
இதயமில்லாதவன் வெடித்திருந்தாலும்
இந்த ஈரத்துளிகள்
'சிலை' என்பதை கடந்த
ஓர் உயிர்ப்பின் பிரகடனத்துக்கு
இட்டுச் செல்லும்
என்றுணர்வாய்.
ஆத்ம சாந்தியை
பிரார்த்தனை செய்.
துன்பம் சேர்க்கும்
இந்த துயிலில் இனித்தோய வேண்டாம்










## இயேசுவே! இரத்தக்கோடுகளில்தானா உமது உயிர்ப்பின் சித்திரங்கள், எப்போதும் வரையப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும்?

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.